2740
PTS LIBRARY
1960

சேரர் தாய முறை

டாக்டர். ச. சோமசுந்தர பாரதியார்

சேரர் தாயமுறை

டாக்டர். நாவலர்
ச. சோமசுந்தரபாரதியார்

வள்ளுவர் பண்ணை
137, பிராட்வே - சென்னை.1

வெளியீடு 43.

முதற்பதிப்பு: 1935.

இரண்டாம்பதிப்பு: ஜனவரி, 60

பொங்கல் வெளியீடு

விலை ரூபாய் ஒன்றரை

அச்சிட்டோர்:

மெட்ரோபாலிடன் பிரின்டர்ஸ்

சென்னை-2.

பதிப்புரை

பெருநாவலரும் பேராசிரியருமாகிய டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் தமிழுலகில் தனிச்சிறப்புடன் விளங்கியவர்; தாம் கண்ட உண்மைகளை அஞ்சாது எடுத்துரைக்கும் பேராற்றல் பெற்றவர். அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் பெருமலைபோல் சிறந்து விளங்கிய அவர் தம் புகழை அறியாதார் யார்?

ஆங்கிலமும் செந்தமிழும் ஆராய்ந்த பெரும் புலவராகிய பாரதியார் அண்மையில் நம்மை விட்டுப் பிரிந்தது தமிழுலகிற்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பெரிய இழப்பே ஆகும். நாவலரின் பூதஉடல் மாய்ந்ததே அன்றி, அவர் தம் புகழுடல் என்றும் நின்று நிலவும் என்பது உறுதி. அவர் தம் எழுத்தோவியங்கள் அவர் புகழைப் பறைசாற்றி நிற்கின்றன.

பாரதியாரின் ஆராய்ச்சி நூல்களுள் ஒன்று இந்தச் 'சேரர் தாயமுறை.' இந்த ஆராய்ச்சி நூல் தமிழரின் பண்டை வரலாற்றைத் துலக்கும் ஓர் ஒளிவிளக்கு. இதன் அருமை பெருமைகளைப் பல பேரறிஞர்கள் எழுதியுள்ள பாராட்டுரைகளில் பரக்கக் காணலாம்.

இந்நூல் வெளிவருவதற்குப் பல வகையிலும் உதவிய அன்பர்கள் எல்லோருக்கும் எனது உளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

சென்னை,
14-1-60.

ந. பழநியப்பன்,
வள்ளுவர் பண்ணை.

பொருளடக்கம்

	பாயிரம்	5
	மதிப்புரைகள்	11
	பாராட்டு முன்னுரை	23
1.	முன்னுரை	27
2.	தாய முறை நியமங்கள்	31
3.	சங்க நூற் சான்றுகள்	34
4.	பிற சான்றுகள்	70
5.	மருகன் என்ற சொல்லின் பொருளாட்சிகள்	83
6.	பதிற்றுப்பத்துப் பாட்டுக்களிலெல்லாம் மருகர் என்றே சுட்டவும் பதிகங்களில் மட்டும் 'மகன்' என்றே வந்த பிரயோ கத்தின் பொருட் பொருத்தம்	85
7.	முடிவுரை	90

பாயிரம்

பல ஆண்டுகளுக்கு முன் சேரர் தலை நகரான வஞ்சி பற்றிய ஆராய்ச்சிக்காக முன் இடைவிட்டுப் படித்துவைத்த பதிற்றுப்பத்தை மீண்டும் முற்றும் ஒரு முகமாகத் தொடர்ந்து உற்று நோக்க நேர்ந்தது. அப்போது அந்நூலுள் செய்யுள்களுக்கும் பதிகப் பாட்டுக்களுக்கும் பாட்டுடைச் சேரரைப் பற்றிய தொடரமைப்பில் சில மாறுபாடுண்மை புலப்பட்டது. பதிகங்களிலெல்லாம் ஒரு படியும், நூலின் பாட்டில் எல்லாம்வேறுவிதமும் குடி மரபுக் குறிப்புக்களைச் சுட்டும் தொடர்கள் அமைந்து நிற்பது என் கவனத்தைக் கவர்ந்தது. எனினும், அப்போது செய்த சேரரின் ஊர் ஆராய்ச்சியை முடித்துப் பின் இச்செய்தியை ஆய்தல் நலம் என நினைத்து அதனைக் குறித்து வைத்தேன். பிறகு வஞ்சி பற்றிய என் ஆராய்ச்சியை முடித்துச் "சேரர் பேரூர்" என்ற கட்டுரையை எழுதி, என்னை அது செய்யத்தூண்டிய பெருந்தகையார், கற்பவை கசடறக் கற்றுக் கற்றதனால் ஆய பயன் காட்டுமா போலக் கற்றபடி நிற்றலை மேற்கொண்டு ஒழுகிய தமிழ் வாணரான தஞ்சை வக்கீல், ராவ்பகதூர் ஸ்ரீநிவாசப்பிள்ளையவர்களுக்கு அனுப்பினேன். அதன் பிறகு, தனியே ஆராயக் குறித்து வைத்த சில சொற்றொடரின் கருத்து அறிய விரும்பி மறுபடியும் பதிற்றுப்பத்தையும், சிலப்பதிகாரம், புறப்பாட்டுக்களில் சேரரைப்

பற்றிய பகுதிகளையும் ஊன்றிப் படித்தேன். அப்போது, தமிழ் இலக்கியம் முழுதும் தந்தைக்கு மகன் முறை சுட்டும் இடந்தோறும் இன்னான் சேய் இன்னான் என்ற வாய்பாடே எங்கும் வரும் பொதுவியல்புக்கு மாறாகப் பதிற்றுப்பத்துப் பதிகங்கள் மட்டும் வேறோர் தனி முறையாளக் காரணம் வேண்டும் எனக் கண்டேன். இப்பதிகங்களில் யாண்டும் முன்னைய சேரர் பெயர்க்கு எல்லாம் தவிராமல் "குவ்வுருபு கொடுத்துப் பிரித்து முதலில் நிறுத்தி, அதன் பின் அவனுக்கு இன்னான் தேவி ஈன்ற மகன், பாட்டுடைச் சேரன்" எனத் தெரித்துப் போகும் தனிப் புதுமுறை என்னை ஊன்றிச் சிந்திக்கச் செய்தது. அச்சிந்தனையும் அது பற்றித் தொடர்ந்த ஆராய்ச்சியும் பண்டைச் சேரர் தாய் வழித்தாயத்தார் என்பதை எனக்குத் தெளிவிக்க, அதன் உண்மை உணரலானேன்.

பிறகு வழக்கம் போல் நான் கண்ட உண்மையைப் புலத்துறை போகிய என் நண்பர் சிலருக்குச் சல்லாபப் பொருளாகச் சொல்ல நேர்ந்தது. அவர்கள் அக்கருத்தை வெளியிடுமாறு என்னைத் தூண்டி வந்தனர். மதுரைத் தமிழ்ச் சங்க நிருவாகம் திறமையுடன் நடத்துபவரும், தமிழ் அறிவாரைத் தலைக்கூட்டி அவருக்கு இயைந்த முறை வேளாண்மை செய்து மகிழும் தலை நின்ற நீதி வாதியுமான திரு. T. C. ஸ்ரீநிவாசையங்கார் அவர்களிடம் இதை ஒரு நாள் நான் பேச நேர்ந்தது. தமிழ் ஆராய்ச்சிகளினும் தன் நண்பரிடத்தும் அவர்களுக்குள்ள பேர் ஆதரத்தால், உடனே இதை விளக்கி

ஒரு கட்டுரையாக வெளியிட வேண்டும் என என்னை வற்புறுத்தி ஊக்கினார்கள். அப்பணி மறுக்க அஞ்சி, ஊர்தோறும் உழன்று உழைக்கும் என் வக்கீல் உத்தியோக நெருக்கடியினிடைக் கிடைத்த சிறு நேரத்தை மீண்டும் இவ்வாராய்ச்சிக்கு உபயோகித்து ஆழ்ந்து ஆராய்ந்து கண்ட என் முடிவுகளை ஆங்கிலத்தில் சிறு சஞ்சிகையாக 1929-ஆம் ௵ வெளியிட்டேன். அப்போது அதைத் தமிழ் படுத்தித் தரும்படி நண்பர் சிலர் வேண்டித் தூண்ட, நானும், என் அவகாசக் குறைவில் இயன்ற வரை ஒரு கட்டுரை தமிழில் எழுதிக் கொடுத்தேன்; அது தமிழ்ச் சங்க வெளியீடான செந்தமிழில் (27-ஆம் தொகுதியின் 4-ஆம் பகுதியில்) பிரசுரிக்கப்பெற்றது.

பிறகு அதைப்படித்த பண்டிதர் திரு.மு. இராகவையங்கார் அவர்கள் என் முடிவையும் நான் கொண்ட பதிற்றுப்பத்துப் பதிகத் தொடர்ப் பொருளையும் மறுத்துச் "செந்தமிழில்" (27-ஆம் தொகுதியின் 10-ஆம் பகுதியில்) ஒரு கண்டனம் எழுதி வெளியிட்டார்கள். அதைப் படித்த பல நண்பர் அதற்கு மறுப்பு எழுத என்னைத் தூண்டினர். உண்மை காண முயல்வதே என் கருத்தாகையால், பண்டிதர்களோடு சொற்போர் தொடர விருப்பமின்மையை விளக்கி, எங்களின் இரு கட்டுரைகளையும் முறையே படிப்பவருக்கு உண்மை தானே எளிதில் வெளிப்படும் என வாளா இருந்தேன். எனினும், என் மருகர் மதுரை அட்வோகேட் L. கிருஷ்ணசாமிப் பிள்ளை அவர்கள் என் விருப்பம் அறிந்தும் அமையாது, பண்டிதர் அவர்களின் கண்

டன உரைக்குத் தாம் ஓர் விளக்க மறுப்பு எழுதிச் செந்தமிழிலேயே (28-ஆம் தொகுதியின் 7-ஆம் பகுதியில்) வெளியிட்டார்கள். அத்துடன் அவ் வாதம் நின்றது.

பதிற்றுப்பத்துப் பதிகத் தொடர்கள் தாய் வழி குறிப்பதென முதலில் கண்டவன் நானல்லன்; முன்னமே இக்குறிப்பு உணர்ந்து, ஆங்கிலத்தில் தாம் எழுதிய "தமிழ் வரலாற்"றில் இதைக் காலம் சென்ற திரு. M. ஸ்ரீநிவாசையங் கார் அவர்கள் சுட்டியுள்ளார்கள் என, பண்டிதர் திரு. மு. இராகவையங்கார் அவர்கள் என் கட்டு ரைக்கு எழுதிய கண்டன உரையால் அறிந்து மகிழ்ந் தேன். பிறகு அக் குறிப்பையும் அவர்கள் ஆங்கிலப் புத்தகத்தில் படித்துப் பார்த்தேன். பதிகத் தொடர் களின் முதலில் குறிக்கும் சேர மன்னருக்கு பாட்டுடைச் சேரர் புதல்வரல்லர்; இடைத் தொடர் சுட்டும் இரு முது குரவருக்கும் புதல்வராய்ச் சேர ருக்கு வழித் தோன்றலாம் மருகரே யாவர் என முதலில் கண்ட பெருமை ஸ்ரீநிவாசையங்கார் அவர்களதே எனத் தெளிந்தேன். தேவி, வேண் மாள் என்ற சொற்கள் மனைவியரையே குறிக்கும் எனத் தெளிந்த அவர்கள், "மகள்" என்ற சொல் சங்க நூலில் மனைவிப் பொருளில் வருமென அறி யாமையால் சிறிது மறுகி, "சேரலாதற்குச் சோழன் மகள் ஈன்ற மைந்தன்" என்ற சிலப்பதிகாரத் தொடரில் வரும் "மகள்" என்பது "மகன்" என்று இருக்க வேண்டும் எனவும், அது சுவடி பெயர்த்து எழுதுவோரால் "மகள்" எனப் பிழைபட எழுதப்

பட்ட தவருன பாடபேதம் எனவும் கருதினர்கள். "மகள்" என்பதற்குச் சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய சங்கநூல்களிலேயே "மனைவி"ப் பொருள் பிரயோகம் உண்மையை அவர்கள் அறிந்திருந்தால், அவர்கள் கண்ட பதிகப் பொருள் துணிவை இன்னும் வலியுறுத்தி விளக்கி இருப்பார்கள். அப்போது என் கட்டுரையே வேண்டப் படாது. அவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்டதை முன் அறிந்திருந்தால் பிறிது பொருளாராய்ச்சியிடையே இப் பதிகத் தொடர்கள் சுட்டிய குறிப்பைக் கொண்டு நான் செய்த ஆராய்ச்சிக்கு அவசியமே இருந்திராது.

இனி, சமீபத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் தங்கள் சங்கப் பண்டிதப் பரீக்ஷைக்கு இக் கட்டுரைப் பிரதி வேண்டிக் கேட்கலாயினர். முன் செந்தமிழில் விரைந்து எழுதி வெளிவந்த என். கட்டுரையை இன்றியமையாச் சில சிறு திருத்தங்களுடன் இப்போது சஞ்சிகை உருவில் தருதற்குரிய காரணம், மாணவரும் தமிழ் அன்பர் சிலரும் இதைப் படிக்க விரும்பிப் பிரதிகள் வேண்டியது ஒன்றேயாகும். இதைப் படிப்பவர் இன்னும் விரிந்த ஆராய்ச்சிகளில் இறங்கி மெய்ப்பொருள் காண முயலுதற்கு இஃது உதவுமாயின், அதுவே நான் விரும்பும் கைம்மாருகும்.

என் கட்டுரையைப் படித்து மதிப்புரைகள் உதவிய புலமைப் பெருந்தகையினர்க்கு என் நன்றி என்றும் உரியதாகும். இவ்வாராய்ச்சி உரையை மதித்துப் பரீக்ஷா பாடமாக்கிய மதுரைத் தமிழ்ச்

சங்கத்தார் அன்பைப் பாராட்டுதல் அன்றிப் பிறிது நான் செய்தற்கில்லை. இதனை அச்சிட்டு வெளிவரச் செய்வதில் அனைத்துதவியும் விரும்பிச் செய்த என் நண்பர், மதுரைச் சங்க நூற்பரிசோதகரும் செந்தமிழ்த் துணைப் பதிப்பாசிரியருமான, திரு. இராமாநுஜையங்கார் அவர்களின் உதவி மறக்கொணாது.

என்னைப் பல ஆராய்ச்சிகளிலும் ஊக்கி, என் கட்டுரைகளைப் பாராட்டி வெளியிடப் பண்ணிவரும் கெழுதகைமைத் தமிழ்வாணர் எல்லார்க்கும் இக் கட்டுரையை உரிமைசெய்து உவக்கின்றேன்.

அண்ணுமலை நகரம்
பவஙூ மாசிமீ 14௳
25—2—1935

ச. சோமசுந்தர பாரதி,
அட்வோகேட், தற்போது
தமிழ்ப் பேராசிரியர்,
சர்வகலாசாலைத் தமிழ் பகுதித் தலைவர்

மதிப்புரைகள்

சென்னைச் சட்டசபைச் செக்ரட்டரி திருவாளர் திவான்பகதூர்

R. V. கிருஷ்ண ஐயர் அவர்கள் B. A,, M. L.,

எழுதியது

(ஆங்கிலக் கடித மொழிபெயர்ப்பு)

அன்புமிக்க பாரதியாரே!

சேர அரசர் தாய முறையைப் பற்றிய தங்கள் மிக இனிய கட்டுரையை முழுவதும் படித்துப் பார்த்தேன். சேர அரசருள் மருமக்கள் - தாயமுறை உண்மையைச் சங்க நூல்கள் ஆதரிப்பன என்றே யான் எஞ்ஞான்றும் எண்ணினேன். தங்கள் கட்டுரையில் 5-ஆம் பக்கத்து 4-ஆவது பிரிவில் தங்களாலும் காட்டப்படும் சொற்றொடரைத் திரு. எம். ஸ்ரீநிவாச ஐயங்கார் தம் 'தமிழ் ஆராய்ச்சிகள்' என்ற நூலுள் 273-ஆம் பக்கத்தில் மணக்கிள்ளியை நெடுஞ்சேரலின் உடன் பிறந்தாட்குக் கணவனாகவே கொண்டு விளக்கியுள்ளார், திரு. பி. டி. ஸ்ரீநிவாச ஐயங்கார் தம் 'தமிழ்ச் சரிதம்' என்ற நூலுள் 512-ஆம் பக்கத்தில் இக் கருத்தோடு மாறுபடக் கூறினர் எனினும், அவர் கூற்று வலியற்றது என நான் கருதலானேன். சேர அரசர் வழியில் மருமக்கள்-தாயத்தை ஆதரிக்கச் சங்க நூல்களில் இவ்வளவு பொதி நிதி போன்ற செய்திகளிருப்பதை நான் முன் அறியேன். இவ்

வெல்லாச் சான்றுகளையும் திரட்டித் தாங்கள் ஒரு கட்டுரையாக வெளியிட்டது தமிழகத்திற்கு ஒரு பெரும்பணி இயற்றினதாகும். மருமக்கள் - தாய முறையானது மக்கள் - தாயக் குடிகளின் மேல் புதிதாகச் சுமத்தப்பட்டதென்னும் கொள்கை அதன் அளவில் முதன் முகத்தே நிலையுறுவதன்றாம். மக்களின் முற்போக்கு முறையில் தந்தை வழிக் குடியினின்றும் தாய்வழித் தாய நிலை ஏற்படுவது எஞ்ஞான்றும் இல்லையாகும். தென்னாட்டில் வந்தேறிய ஆரியர் (தந்தை வழி) நாகரிகம் இப் பழைய தாய்வழித் திராவிட நாகரிக முறையை மேலைக் கடற்புறத்தே ஒதுக்கியது என்பதும், அக்குடகடல் அடைகரைக் கேரள நாட்டினின்றும், இப்பழைய தாயமுறையை ஒழித்துவிட ஆரிய நாகரிகத்திற்கும் ஆகாதுபோயிற்று என்பதும், இயல்பாகக் கூடியதாம். ஆரியர் நாகரிகம் தந்தை வழித் தாயத்தின் மேல் நிலைபெற்றது. இன்னும் சின்னளில் இம் மருமக்கள் - தாயமுறை எவ் அளவில் தமிழர் பழ இயல் ஒழுக்காம் என்பதையும் தாங்கள் ஆராய்வீர்கள் என்றும், அதனையும் ஆராய்ந்து நாகரிக உற்பத்தி வளர்ச்சி விசாரத்திற்கு விரும்பத்தகும் நல் உதவி ஆற்றுவீர்கள் என்றும் நான் நம்புகின்றேன்.

மிக்க அன்பு பாராட்டுடன்,

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
16—1—1935

உண்மையில்
தங்களவன்,

(ஆங்கிலத்தில் ஒப்பம்) **ஆர். வி. கிருஷ்ணன்**

மதராஸ் கார்ப்பொரேஷன் வித்யா இலாகாப் பரிசோதகர்

திருவாளர்

S. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள், B.A., L.T.

எழுதியது.

(ஆங்கிலக் கடித மொழிபெயர்ப்பு)

தமிழ்ப் பேராசிரியர் திரு. எஸ். எஸ். பாரதியார் அவர்களின் "சேர நாட்டுத் தாய முறை" என்ற தனிக் கட்டுரையை மிக்க ஆர்வத்துடன் படித்தேன். "தசரதன் குறையும் கைகேயி நிறையும்" என்ற ஆராய்ச்சி உரையை முன் திறம்பெற ஆக்கியோர் ஆகிய அப்பேராசிரியர் அவர்கள், இக் கட்டுரையில் பண்டைத் தமிழக வரலாறுகளை விசாரிப்பார் பலர் உள்ளத்தே தோன்றிய சங்காலப் பெருஞ் சேரர் வழிமுறை பற்றிய மயக்கங்களையும், தவறான சில கருத்துக்களையும், தெளியவைத்து விளக்கியுள்ளார்கள். பண்டைச் சேர குல அரசர்கள் இன்று மலையாள நாட்டில் வழக்கிலுள்ள மருமக்கள்- தாய முறையையே மேற்கொண்டிருந்தனர் என்று மறுக்க வொண்ணாதவாறு இவர்கள் நிறுவிய முடிபு தமிழக வரலாற்றுத் துறையில் உழைப்போர் பலர்க்குப் புதிதாக வெளிப்படுத்தப்பட்ட உண்மையாகும். பேராசிரியர் பாரதியார் அவர்கள் இப்புத்தகத்தே தமது ஆழ்ந்த தமிழ் இலக்கிய ஆராய்ச்சியையும், சட்ட ஞானத்தையும் தம் வளமிக்க நுண்மாண் நுழை புலப் பேற்றினையும் இவ்வாராய்ச்சியில் புகுத்திப் பயன்படுத்தமையால், இது புகழ் சான்ற பழஞ்

சேரர் வரலாற்றில் நமக்குள்ள குறை அறிவை நிரப் பப் பேர் உபகாரமாயிற்று. நூல் சான்றுகளை வடித் தெடுத்துச் சீர்தூக்கி ஆளும் அவர்கள் திறம் மிக வியக்கத்தக்கதாம்.

புலமைமிக்க இந்நூலாசிரியர் தாம் வழக்கறிஞ ராய் இருந்த ஞான்று தமது இன்பக்காலப் போக் காய்த் தமிழ்ச்சுவை துய்க்கும் இடையே இத் தனி ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினர் என்பது குறித்து வியக்கத்தக்கது. அண்ணமலை நகர்க்கண் நிறுவப் பெற்ற தமிழ்ப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பகுதித் தலைவராக இவர்களை நியமித்து, இவர்கள் முழுநேர விழுப்பணியைத் தனதாகப் பெற்றது தமிழகத்துக் குப் பெரும் பேருகும். இதுபோன்ற திறஞ் சான்ற நுண்பொருணூல் இன்னும் பல உபகார நிதியாக இவர்கள் தருவார்கள் என எதிர்பார்ப்பவன் யான் ஒருவனல்லன்; என்போல்வார் பலருள்ளார்.

(ஆங்கிலத்தில் ஒப்பம்) **எஸ். சச்சிதாநந்தம் பிள்ளை**

சென்னை
12-2-35

சபாபதி நிலயம், லாயிடு ரோடு
இராயப்பேட்டை P. O.

மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலைத் தலைமை
ஆசிரியர், பிரும்மஸ்ரீ

திரு. நாராயண ஐயங்கார் அவர்கள்

எழுதியது

சேரர் தாயமுறை என்னும் இவ்வராய்ச்சி உரையானது நுண்மாண் நுழைபுலச் செல்வரான

திருவாளர் எஸ். சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பீ. எல்., அவர்களால் எழுதப்பெற்றது.

இதன்கண் சேரர்குலத்தினர்க்கு, அவர் நாட்டில் இக்காலத்தில் வழக்கத்திலிருக்கும் மருமக்கள்-தாயமுறையே முற்காலத்திலும் வழங்கி வந்தது என்று பல சான்றுகளால் ஆராய்ந்து காட்டப்பட்டிருக்கிறது.

அது இக்காலத்துள்ள புலவர் பலர்க்கும் புது விருந்தாய் அமைந்து மகிழ்வூட்டி வருகிறது. பாரதியார் எழுதும் ஆராய்ச்சி உரை ஒவ்வொன்றும் அப்படிப்பட்டதே.

அவற்றுள்ளும் இவ்வாராய்ச்சி மறந்து ஒழிந்து இழந்த (பண்டைச்) சேரர் மருமக்கள் - தாயத்தை நாட்டற்கு எழுந்ததொரு போராட்டமாயும் உள்ளது.

இத்தகைய போராட்டத்தில் எதிர்ப்போரைப் பழித்துரைத்தல் இன்றி விடயத்தை விரித்து உரைத்து மேற் செல்லும் மேலான வாதமுறைக்கு இது வழி காட்டியாய் இருக்கிறது.

தம் துணிபுரைத்தற்குச் சாதனமான சான்றுகள் ஒரு சில பிறர் துணிபுரைத்தற்கும் சாதனமாவன போன்று தோன்றும். அவை ஒவ்வொன்றும் அவ்வாறு அன்று என்று காட்டி நாட்டுதற்கேற்ற தடை விடைகளை உட்கொண்ட தொடை நடையினால் விடயங்களை விளங்கச் சொல்லிச் செல்லும் திறமானது வழக்கியல் முறையால் மன்றுாடல் திறமையின் மாண்பு அமைந்து விளங்குகின்றது.

ஆராய்ச்சியுரை வரைவார்க்கு ஈதோர் அருமை வாய்ந்த உரையாணியாய் அமைந்துள்ளது.

இன்பம் பயக்கப் படிப்பார்க்கு இஃதோர் விநோதமாகத் தோன்றத் தக்கது.

பாரதியார் அவர்கட்குள்ள தமிழ் மொழிப் புலமைக்கும் சங்கநூற் பயிற்சிக்கும் இவ்வாராய்ச்சி உரை ஒன்றே வாய் சான்ற சான்ருய் அமைய வல்லது. "இன்னேனுக்கு, இன்னேன் தேவி இன்னேள், ஈன்ற மகன் இன்னேன்" என்ற வாய்பாடுடைய பதிற்றுப்பத்துப் பதிகச் சொற்ருெடர்களெல்லாம் மருமக்கள் - தாயமுறையை நாட்டுதற்கே ஏற்ற சாதனமென்று காட்டியிருக்கும் பாரதியாரது கல்வித் திறமையும் சொல் வித்தகமும் பாராட்டத் தக்கன.

இவ்வாராய்ச்சிக்கு அடிப்படையான சாதனம் மலைநாட்டுள் இக்காலத்தும் மருமக்கள்- தாயமுறை இருந்து வருதலேயாம். அதனை முதலில் நன்கு விளக்கிக்கொண்டு முறையே பழைய சங்க நூல் சான்றுகளை அதற்கு இணங்கக் காட்டிச் செல்வது 'நிரந்து இனிது சொல்லுதல்' என்னும் சொல் வன்மையைப் புலப்படுகிறது.

சொல்வன்மையும், நுண்ணுணர்வும் கொண்டு தாம் பிடித்ததனையே சாதிக்க விரும்பும் ஒரு சிலர் போல் அன்றிச் செப்பத்தினின்றும் திறம்பாது நின்றே சங்க கால நிகழ்ச்சியினை உள்ளவாறு உணர்ந்து, உணர்ந்தவாறு பிறர்க்கு உணர்த்தும் பாரதியார்தம் உழைப்பும் ஊக்கமும் ஒப்புரவாண்மையும் நன்கு மதிக்கத் தக்கன.

சுருங்கச் சொல்லின், இவ்வாராய்ச்சி உரையானது அளவினுல் சிறியதே ஆயினும் புலமையால் பெரியதென்று போற்றத்தகும் என்பதே எனது துணிபு.

(ஒப்பம்) திரு. நாராயணையங்கார்,
தமிழ்ச் சங்கம், மதுரை

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர்
திருவாளர்,

பண்டித மணி. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்

எழுதியது

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பகுதித் தலைவர் திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A., B.L., அரிதின் ஆராய்ந்து எழுதிய "சேரர் தாயமுறை" என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையைப் படித்துப் பார்த்தேன். இஃது இக்காலத்துக் கேரள நாட்டினரிடைக் காணப்படும் மருமக்கள்-தாய முறைக்குச் சங்க நூல்களில் ஒன்ருகிய சேர வேந்தர்களின் சிறப்புக் கூறிய பதிற்றுப்பத்து என்னும் பழந்தமிழ் நூலின் பதிகப் பாட்டுக்களில் கண்ட குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு வரையப்பட்டு உள்ளது. இவ்வாராச்சி தமிழில் இதுவரை யாரும் மேற்கொள்ளாத ஒன்று. அப்பதிகப் பாடல்களில் தாம் மேற்கொண்ட பொருட்கு இயைந்த பகுதிகளுக்குத் திரு. பாரதியார் அவர்கள் கண்ட பொருள், முட்டுப்பாடின்றியும், கலக்கம் இன்றியும் தெளிவுறுத்தப்பட்டுள்ளது. அப்

பொருள் வலியுறுதற்கு உரிய பற்பல சான்றுகள் திறனுற எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. பழமையே நினைவு கூர்ந்து ஒழியாது உண்மை ஆராய்ச்சியில் தலைப்படலும், முன் நூல்களில் கண்ட ஒன்றை எதிர்த்து ஆராய்தலும், உண்மையெனக் கண்டவற்றை எக்காரணங்களையும் முன்னிட்டு மறையாது வெளிப்படுத்தலும் நம் பாரதியார் அவர்கள்பால் காணப்படும் அருஞ் செயல்களாம். இவற்றிற்கு இக் கட்டுரை ஒன்றே போதிய சான்றாக நின்று திகழ்கின்றது. பதிற்றுப்பத்துப் பதிகப் பாடல்களில் கண்ட பகுதிகள் இன்ன சேரற்கு இன்னன் தேவி ஈன்ற மகன் இன்னன் என்று பின் ஒரு சேரன் சுட்டப்படுதலான், அவற்குத் தாயும், தந்தையும் வேறாக அவன் முன்னைச் சேரற்கு ஏதோ ஒரு வகைத் தொடர்புடையனவன் என்பது போதரும். அத்தொடர்பு அரசியல் உரிமை எனவும், அவ்வுரிமைக்கு அவன் உரியனாதல் மருமக்கள் - தாயமுறையானும் எனவும், அதனால் அவற்கு முன்னைச் சேரன் மாமனவன் எனவும், அச்சேரன் சோதரியே பின்னவன் தாயாவள் எனவும் கொண்டு மருமக்கள்-தாயமுறையை நிறுவிய, திரு. பாரதியார் அவர்களின் நுண்மாண் நுழைபுலமும் நூலறிவும் ஆராய்ச்சித் திறனும், அறிஞருள்ளத்தை வியப்புறச் செய்து இன்புறுத்துவனவாம். இவர்கள் ஆராய்ச்சித் துறை எல்லாம் இங்ஙனமே புதிய நெறியிற் சென்று பழமையின் உண்மையைப் புலப்படுத்தும் இயல்பினவாம் என்பது முன்னர் இவர்கள் வெளிப்படுத்திய சில ஆராய்ச்சிக் கட்டுரைகளாலும் உணர

லாம். "தொன்மையவாமெனும் எவையும் நன்ருகா, இன்று தோன்றிய நூலெனும் எவையும் தீதாகா" என்னும் கொள்கையைக் கடைப்பிடித்து ஒழுகும் திரு. பாரதியார் அவர்களின் ஆய்வுரை புலவர் உலகத்துக்கு நல்ல விருந்து ஆதலே அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். நீடு வாழ்க!

அண்ணுமலை நகர், 26—2—35 (ஒப்பம்) **மு. கதிரேசன்**

கால்நடை மருத்துவ இலாகாவில் பென்ஷன் பெற்ற மேல் அதிகாரி, திருவாளர் ராவ்சாகிப்

வி. பி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் G. P. V. C. எழுதியது.

(ஆங்கிலக் கடித மொழிபெயர்ப்பு)

என் அன்பிற்குரிய ஐயா!

......தங்கள் 'சேரர் தாயமுறை' ஆராய்ச்சிக் கட்டுரையைப் பற்றிய விவரமான என் கருத்தை எழுதி இப்போது அனுப்புகிறேன். இது வரையறையும் தெளிவும் அற்ற பொது உரையாகக் கருதப் பெருதென நம்புகிறேன். தங்கள் 'சேரர் தாயமுறை'யையும் அதற்கு மறுப்பாகப் பண்டிதர் திரு. மு. இராகவையங்கார் அவர்கள் எழுதி வெளியிட்ட சேரர் தாய வழக்கிஜனயும் அம்மறுப்பை மறுத்த நீதிவாதி திரு. எல். கிருஷ்ணசாமிப்பிள்ளை அவர்களின் 'சேரர் தாயமுறை'க் கட்டுரையையும் நான் படித்து முடித்த பிறகே இத்துடன் அனுப்பும்

என் கருத்துரை எழுதப்பட்டது. இதுவரை உலகறியாப் புதிய செய்திகள் இனி வெளிவந்தால் அன்றித் தங்கள் கட்டுரை முடிபுகள் அசையமாட்டா. ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்குமுன் (1929-ஆம் ஆண்டு பெப்ருவரி—மார்ச் மாத வெளியீட்டில்) செந்தமிழ்ப் பத்திரிகையில் தங்கள் 'சேரர் தாய முறை'யைப் படித்துள்ளேன். அக் கட்டுரை மெய்ம்மை ஆராய்ச்சிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாம் என்பதே அப்போது அக்கட்டுரை என் உள்ளத்தே தோற்றுவித்த கருத்தாம். தங்கள் வாதங்கள் திட்டமானவையாய் நேரக்கூடிய தடைகளுக்கும் தக்க விடைகளாய் நின்று பதிற்றுப் பத்துப் பதிகங்களுக்குத் தாங்கள் கூறும் செம்பொருள் பொருத்தத்தை எனக்கு வலியுறுத்திக் காட்டின. அன்றியும், இதில் தாங்கள் கண்ட முடிபுகள், "ஒரு நாட்டில் நடைபெறும் வழக்கானது புதிது இடை வந்தது எனக் காட்டும் தக்க பிற வேறு சான்று இல்வழி ஆண்டு அப்படியே முற்காலத்தும், வழக்குப் பெற்று இருந்தது என்றே கொள்ள வேண்டும்" என்னும் சரித அளவை அறிவுநூல் துணிபுக்குச் சாலப் பொருத்தமுடைத்து.

தங்கள் விருப்பப்படி தங்கள் கட்டுரையை யான் மறுமுறையும் படித்து முடித்ததால் யான் முன் கொண்ட கருத்தே மிகவும் வலியுறுவதாயிற்று.

இளங்கோவடிகளும், அவர் உரையாளராகிய அடியார்க்கு நல்லாரும் எடுத்தாளும் 'மகள்' என்னும் மொழி புதல்விப் பொருளன்றிப் பிறிது பொருள் தராதாயின் பதிகங்களுக்குப் பொருள் விளக்கத்

தாங்கள் மேற்கொண்ட பெருமுயற்சி பயனற்றதாம் என்று மேற்குறித்த செந்தமிழ் 134-ஆம் பக்கத்தில் தாங்கள் கூறுகின்றீர்கள்.

தனக்கு உண்மையின் உரிய மனைவி என்ற பொருள் மகள் என்ற மொழிக்கு இலதாமாயினும் கூட, பதிகம் இயற்றியோர் சேரர்க்கு மருமக்கள்-தாயமுறையைத் தவருகச்சார்த்தி வைத்தார் என்ற செய்தியைத் தாங்களே முதன் முதலில் மறுக்க ஒண்ணுவாறு நிறுவிய நற்பணி செய்தீராவீர்கள். ஆனுல், மகள் என்ற சொல்லுக்கு மனைவிப் பொருள் உண்டு என்பது தங்களாலேயே பின்னுல் சான்று காட்டி நிறுவப்படுகின்றது. பதிகங்கள் மருமக்கள் தாயமுறையைக் குறியாது மக்கள் - தாய வழியினையே குறிக்கும் எனக் காட்டக் கருதி வருந்தி முயன்ருேர் எல்லோராலும், தங்களின் உரை முகத்தே பதிக ஆசிரியரது தவற்றினை அகற்றிக் காத்தல் ஆகாது. உண்மையில் மகட்பொருள் விளக்கம் என்ற தலைப்பின்கீழ்த் தாங்கள் விளக்கிய நியாய வாதங்களால் மேற்கூறிய முயற்சியாளர் அப்பதிக ஆசிரியர்க்கு வழங்கிய வழுநிலையினின்றும் அவரைத் தாங்களே மீட்டுத் தந்துள்ளீர்கள்.

“பிற சான்றுகள்” என்ற தலைப்பின்கீழ்த் தாங்கள் விளக்கும் நியாயங்கள், முதலிலே அசைக்க இயலாதவாறு தங்களால் நிறுவப்பெற்றுள்ள “சேரர் தாயமுறையைப் பற்றிய தங்கள் முடிபுகளை” மீண்டும் நன்று வலியுறுத்துகின்றன.

பதிகங்களில் மகன் என்ற சொல் வந்தமை யானே பதிகங்களின் பொருள்பற்றிய இடர்ப்பாடு

உண்டாயதென்று எனக்குத் தோற்றுகின்றது. தாங்கள் தெளிய விளக்கியுள்ளவாறு பதிகங்களின் ஆசிரியரால் மகன் என்னும் மொழி செழும் பொருள் நயத்துடன் வழங்கப்பட்டுள்ளது. யான் அறிந்த வரையில் மகன் என்னும் சொல்லைவிட, அன்றி அதனை ஒப்பவாகிலும், பதிக ஆசிரியரது கருத்தை விளக்குதற்கு உரிய சிறந்த சொல் வேறொன்று தமிழ் மொழியில் இல்லை. அரசுரிமைத் தந்தையான அம்மான்பால் தன் தாய்வழி அரசினை உரிமையில் பெறும் அரசுரிமைப் புத்திரனாகிய மருமானைக் குறிக்க மகன் என்ற சொல்லை வழங்கிய பதிக ஆசிரியர், 'ஞானபிதா' 'ஞான புத்திரன்' என்னும் வழக்கினை உளத்துக் கொண்டார் போலும். கைவல்ய நவநீதம் தத்துவ விளக்கப்படலம் 19-ஆம் செய்யுளில் ஞானகுரு தன் மாணவனை, 'வாராய் என் மகனே!' என்று விளித்தல் ஈண்டு நோக்கற்பாற்று.

(ஆங்கிலத்தில் ஒப்பம்)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்,

வெள்ளகால், திருநெல்வேலி ஜில்லா, 26—1—35.

பாராட்டு முன்னுரை

சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பேரகராதித்
தலைமைப் பதிப்பாசிரியர்,

திரு. S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், B.A., B.L.

எழுதியது

சிறந்த தமிழ் அறிஞரும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியருமாகிய திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கள் எழுதி வெளியிடும் இந்நூலுக்குப் பிறர் ஒருவரது முன்னுரை ஒன்று வேண்டும் என யான் கருத மாட்டேன். 1929-ஆம் வருஷத்திலே பாரதியார் அவர்களின் வாசஸ்தானமாகிய பசுமலைக்கு யானும், எனது நண்பர் ஒருவரும் சென்றிருந்தோம். அப்பொழுது சேரர் தாய முறையைக் குறித்து அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியிருந்த கட்டுரையில் சில பாகங்களை எங்களுக்கு வாசித்துக் காட்டினுர்கள். அவர்களுடைய ஆராய்ச்சித் திறத்தினைப் பெரிதும் வியந்து, இக் கட்டுரையினைச் சரித்திர சம்பந்தமான மாதாந்தரப் பத்திரிகைகளில் வெளியிட்டுப் பலர்க்கும் உபகாரமாம்படி செய்ய வேண்டுமென வற்புறுத்தினேன். பின்னர், அதனைத் தமிழ்ப் படுத்திச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிட்டார்கள். இங்கே கூறியபடி எனக்கும் இந்நூலுக்கும் ஒரு சிறு தொடர்பு இருத்தல் பற்றியே பாரதியார் அவர்

களின் வேண்டுகோளின்படி ஓர் முன்னுரை எழுது தற்கு யான் மனம் உவந்து இணங்கினேன்.

பழந்தமிழ்க் குடிகளுள் ஒரு சாரார் ஆகிய சேர மரபினருள் எவ்வகையான தாயக் கிரமம் அமைந்து இருந்தது என்று ஆராய்ந்து தெளிவதே இந்நூலின் நோக்கம். இந்நூற் பொருளாகிய தாய வழக்கு பண்டைக் காலத் தமிழ்ச் சமுதாயத்திற்கு அஸ்தி வாரம் போன்றது. தமிழ் மக்களது பூர்வ சரித்திர விளக்கத்திற்கு மிக இன்றியமையாதது. ஆதலால், இந்நூலின்கண் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட பொருள் மிக மிக முக்கியமான தாகும். இதுவரை தமிழ் அறிஞர்களும், தமிழ் நாட்டுச் சரித்திர அறி ஞர்களும் ஆராய்ந்து வந்த பொருள்களில் இந்நூல் பொருளைக் காட்டினும் சிறந்தது ஒன்றைக் காணு தல் அரிதாம். இதனை வாசகர்கள் நன்கு உணர்தல் வேண்டும்.

இந்நூல் தோன்றுவதற்கு முன்புதானே, இப் பொருளைக் குறித்துத் தமிழாராய்ச்சியாளர்கள் கவனம் செலுத்தியிருந்தார்கள். ஸ்ரீமான் மு. இராக வையங்கார் அவர்கள் சேரன் செங்குட்டுவன் என் னும் நூலில் பாரதியார் அவர்களது கொள்கை யோடு மாறுபட்ட மக்கள் தாயக் கொள்கையை வற்புறுத்தி எழுதியிருந்தார்கள். காலம் சென்ற ஸ்ரீமான் எம். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள் தமது தமிழ் ஆராய்ச்சி உரைகளில் (Tamil studies) பாரதி யார் அவர்களது கொள்கையை ஒருவாறாக முற்பட உணர்ந்து எழுதியிருக்கிறார்கள். ஆனால், பாரதியார்

அவர்கள் எழுதியதன் பின்னரே இப்பொருள் தமிழ் மக்களது பூர்வசரித்திர உணர்ச்சிக்கு எத்தனை இன்றியமையாதது என்பது அறிஞர்களால் நன்கு உணரப்பட்டது. இவ்வுணர்ச்சி தோன்றுதற்கும், பல அறிஞர்களும் பல படியாக இப்பொருளை ஆராய்தற்கும் பாரதியார் அவர்களே முக்கிய காரணரா யுள்ளார்கள். பாரதியரர் அவர்களே இப்பொருளின் சரித்திர கௌரவத்தை நாம் அனைவரும் நன்கு உணரும்படி செய்தவர்கள்.

மேற் கூறியவற்றுல் இந்நூல் மறுப்புரையாகவும், துணிந்துரையாகவும், இயன்று உள்ளதென அறியலாகும். ஆனல், ஆராய்ச்சியால் உண்மை காணவேண்டுமாயின், அது தருக்க நெறி பிறழாத வாதத்தினுல் ஆகுமே அன்றிப் பிறவாறு ஆகாது. வாதம் இன்றியமையாததாக இருப்பதினுல் அதனைக் கௌரவ புத்தியோடு நிகழ்த்துதல் வேண்டும். எவ்வகையான குற்றமும் இன்றிச் செவ்வையாகவும், கௌரமாகவும் எழுதிய மறுப்புரைகளுள்ளே பாரதியார் அவர்கள் இயற்றிய இந்நூல் மிகச் சிறந்ததாகும்.

இச்சிறந்த ஆராய்ச்சி நூலினைக் கற்றுத் தமிழறிஞர்கள் அனைவரும் பெரிதும் பயன் அடைவார்கள் என்பது திண்ணம்.

(ஒப்பம்) எஸ். வையாபுரிப் பிள்ளை

சேரர் தாய முறை

1. முன்னுரை

கழிந்த ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாகக் கேரளத்தில் பல வகுப்பார் பெண் வழியில் மருமக்கள் தாய முறை பேணுவதைக் காணுகின்றோம். நாம் அறிய இவ்வழக்கம் நாயர் பெருமக்களிடை மட்டும் இல்லை; தென் திருவாங்கூரில் நாஞ்சில் நாட்டு வேளாளர் முதல் வடமலையாளத்தில் மகம்மதிய மாப்பிள்ளைமாரும், பொய்யானூர்க் கூற்றத்துப் பார்ப்பன நம்பூரிகளும், தென் கன்னடத் தொன் மக்கள் பலரும், துளுவர், கொங்கணர் சிலரும் இத்தாய் வழித் தாய முறையையே நெடு நாளாகக் கையாண்டு வருகின்றனர். இவ்வழக்கம் உடையார் எல்லாரும் குடமலைக்கு மேற்கே பண்டைச் சேர நாட்டின் பகுதிகளான மேலைக் கடற்கரை நாடுகளிலே இருப்பதாகவும் அறிகின்றோம். பார்போசா, சோனரத்து முதலிய ஐரோப்பிய யாத்திரிகர் மேல மலைத் தொடருக்கு மேற்கு நில மக்கள் பலர் தம் முன் பிறிதிடத்தில் காண அரிய இப் பெண் வழித் தாயம் பெரிதும் வழங்கப் பெறுவதைக் கவனித்துத் தம் யாத்திரைக் குறிப்புக்களில் இவ் அதிசயச் செய்தியை எழுதியிருக்கின்றனர்.

இக் கேரள வழக்கத்தை நாம் அறிவோம். எனினும், இது புதிதாகக் குடபுலத்தில் எப்படியோ

வந்தேறி நடக்கும் ஒரு இடைக்கால வழக்கம் எனக் கொண்டு வாளா அமைகின்றோம். சேர நாடு தமிழகத்தின் பகுதி என்றும், சேரர் பரம்பரையிலும் மற்றைத் தமிழ் வேந்தர் குடிமரபாம் மக்கள்-தாயமே பண்டை நாளில் அடிப்பட்ட பழ வழக்காய் ஆட்சி பெற்று இருந்தது என்றும் நாம் நம்புகின்றோம். எப்படியானாலும் சங்க காலத்துக்கு நெடிய பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே சேர நாட்டில் மரு மக்கள்- தாயமுறை புது வழக்காய்ப் புகுந்திருக்க வேண்டும் எனக் கொள்கின்றோம். அப்படி நாம் கொள்வதால் அதன் உண்மையினை எனைத்தளவும் ஆராய்தற்கு அவசியம் நாம் காணகில்லோம்.

நம்மிடத்து / இம்மன நிலைக்குத் துணையாகும் காரணங்கள் பல உள. எதனையுமே ஆராயாமல் கண்டபடி கொண்டமையும் இயல் நமது பெரிய மாட்சி. ஊழ் ஒன்றிற்கு இறைமை கொடுத்து ஊக்கத்தை அறத் தொலைத்துப் பாழொன்றப் பொறுமையுடன் பல துறைகளிலும் நாம் பயின்று வருகின்றோம். இப்பழக்கத்தால் நாம் பெற்ற பயன் பலவற்றுள், உண்மைகளைத் தேடுவதில் பெரு வெறுப்பும், கையறவில் கழி விருப்பும் என இரண்டுமாம். இவ் விரண்டும் நம் மனத்தில் நாளடைவில் மிகத் தடித்து வேரூன்றி வளர்கின்றன. மேனாட்டார் கண்டு அளந்து சொல்லு முன்னே நமது பழஞ் சரிதங்களை நாம் உணரோம். நம்மிடையே கிடையாத நமது அரிய பழைய தமிழ் நூல்களெல்லாம் இன்றளவில் இலண்டனிலும் பாரிசிலும் இருக்கப் பார்ப்

போம். நமது தற்கால நிலைக்கு, இவ்வாறு உண்மை நலம் பேணுத நம்மவரின் பெரு நொதுமல் மனப் பாங்கைச் சிறிதல்ல, செம்பாதி காரணமாகக் கூறல் கூடும்.

'பார்ப்பனருக்கும், பணமுடைய மேல் வகுப் பார் பலருக்கும் பெண்டிர் எல்லாம் மணமற்ற இன் பத்திற்குத் துணையாகி வாழ வேண்டும்' என்ற இழி வழக்கைக் கேரளத்தில் வட வாரிய முனிப் பொருநர் பரசுராமர் அந்நாட்டார் நலம் பேணிப் புகுத்தியதாய் நம்பூரிமார் சிலர் நவில்வதனைப் பழமறை போல் கொள்ளுகின்றோம். சங்க நூல் களில் யாதொன்றும் நம் மக்கள் - தாயமரபிற்கு மாருய தாயமுறை சேரருக்குச் சுட்டிலதென்று ஒரு தலையாய்த் துணிகின்றோம். இவை கொண்டு மரு மக்கள்- தாய முறை சங்க காலத் தமிழ்ச் சேரர்க்கில் லாத—பின்பு எழுந்த—புதுவழக்கமென்று அதனில் சங்கையற்றுத் தெளிந்து நிற்போம்.

நாம் அறிய நெடுங்கால ஆட்சியுடைய வழக்கு ஒன்றைப் புதியதெனத் தெளிவிக்கும் தக்க சான்று காணுமட்டும், வழங்குமிடத்து அது நிலைத்த பழ வழக்காய்க் கொள்ளுவதே ஆராய்ச்சித் துறையில் அறிவுடைய நெறியாகும். தொல்லைச் சேரர் கை யாண்ட தாய முறைக்குத் தமிழகத்தில் பழம் பனு வல் ஏதேனும் கரி பகரக் காணுவமேல், அதன் உண்மை ஆராயத் தக்கதாகும். சேரர் குடிப் புகழ் விரிக்கும் தொன்னூல்கள் சிலவற்றுள் இது பற்றிய சான்று சிறிது உளது என ஊகித்தற்கு இட முண்டு. ஊன்றி நோக்கில், இந் நூல்கள் சிலவற்

றுள், பழஞ் சேரர் பரம்பரையில் மக்கள் வழி பேணப்படாமல் தற்காலக் கேரளத்தார் கையாளும் மருமக்கள்-தாய முறையே வழங்கியதாய்க் கரி கூறும் சான்றுண்மை காணுகின்றோம். உண்மையினை உணர்தற்குக் காய்தல் உவத்தல் இல்லாத நடுநிலையில் நின்று நாம் ஆய்தல் வேண்டும்.

2. தாய முறை நியமங்கள்

ஆயும் முன்னர் நாம் அவசியம் அறிந்து வைக்க வேண்டியவாய், இவ்வாராய்ச்சிக்கு உதவுவனவாய தாய முறை வழக்கங்கள் சிலவற்றை வரையறுத்துத் தெளிய வேண்டும். கேரளத்தில் வழங்கி வரும் மருமக்கள்-தாயமுறைக்கு அடிப்படையாயுள்ள சில வருமாறு:—

(1) ஆண் வழியில் அன்றிப் பெண் வழியிலேயே உறவு முறையும் கிளை மரபும் ஆட்சி பெறும்; தாய்மாரே குடி பேணும் அடிமரமாய்க் கருதப்படுவர். கிளை வளமும் குடி நிதியும் பெண் வழியே தழையும் வகை முறை வகுத்துக் குடியறங்கள் நிற்பனவாகும்.

(2) மக்களெல்லாம் தாய்க் குடியின் கிளைஞராவர்; அக் குடியில் ஆடவர்கள் தம் மாமன்மார்க்குரிய வழித் தோன்றல்களாய் வரன் முறையே உரிமை பெறுவர். மருகர் எல்லாரும் வயது வரிசையிலே வரன் முறையாய்த் தனித் தனியே குடியாளும் தலைமை கொள்வர்.

(3) தற்கால நாகரிகப் புதுமாற்றம் சில புகுந்து பழ வழக்கைப் பிறழ்வித்துத் தடுமாறச் செய்யு முன்னே, கேரளத்தில் குல நிதியைப் பிரித்தாளும் பிறப்புரிமை ஆண் மக்கட்கு ஒன்றும் இல்லை. தாய் வழிகள் பிரிந்து சில புதுக்குடிகள் தழைய

லாகும். குடிதோறும் பொது நிதியம் பிரியாமல் வளர்வதாகும். பெண்களுக்கு நிதி ஆட்சி உரிமை இல்லை. குடி நிதியின் பயன் நுகர்ந்து பொது வாழும் உரிமை அக்குடியில் பிறந்தவர்கள்—ஒரு தாயின் வழியினர்கள்—இருபாலார்—எல்லார்க்கும் பொதுவுடைமையாக நிற்கும். பொதுக் குடியைத் 'தருவாடு' என்று அந்நாட்டார் தற்கால மொழி வழக்கில் சொல்லுகின்றார்.

(4) தருவாட்டின் (குடியின்) தலைமை, அதன் நிதியாட்சி மேற்கொள்ளும் உரிமை யெல்லாம் மருகருள்ளே படிப்படியாய் வயது முறை வரிசையினில் வழி முறையே வந்து இறங்கும். ஒருதலை முறையாரின் தநயரெல்லாம் இம் முறையில் ஒப்புரிமை உடையவராய், அவர் பெற்ற புதல்வரெல்லாம் சோதரராய் வயது முறை வரிசையினில் ஒவ்வொருவராக இதை ஏற்கலாவர். அவர்கட்குப் பின் அவர் தாய்மாரின் பெண்மக்கள் ஈன்றுடைய ஆண் மக்கட்கு அவ்வுரிமை அம்முறையே வந்திறங்கும். குடித்தலைமை பெற்று அதனை ஆள்வோரைக் 'காரணவர்' என்றும், அவருக்குப் பின் அக்குடியில் அவ்வுரிமை அடைதற்குரியவரை 'அநந்தரவர்' என்றும் இன்று கேரளத்தில் இத்தாய முறை வழங்கும் குடிகளிலே கூறி வருவர். மருகரெல்லாம் வயது முறை வரிசையினில் வழி முறையே இவ்வுரிமை வரப் பெற்றுத் தத்தம் முறையில் ஒவ்வொருவரும் அத் தலைமை மேற்கொண்டு காரணவராகித் தம் கடனாற்றிக் கிளை தாங்கிக் குடியோம்பி (தருவாட்டைப் பேணி) ஆள்வர்.

(5) கேரளத்தில் கோக் குடிகள் தம்முள்ளும் நாடாளும் கோலுரிமை, குடியாவார் தங்கள் சிறு குடித்தலைமை உரிமையைப் போலவே, மருகர் வழியே வரிசை முறையில் வருவதாகும். கோக்குடியில் பெண்கள் சிலர் தகவுடைய குறு மன்னர் குடியினரை மணந்து வாழ்வார். எனின், மனைவியர்க்குக் கணவர் குடிகளில் உறவுக் கடன் உரிமை பதவிகள் ஒன்றும் இல்லை. பெண்கள் எல்லாம் பிறந்த குடியில் மட்டுமே கிளை உரிமை கடமைகளும் உரிய நிலை மேதகவும் உடையராவர்.

(6) ஆண் மக்கள் தம் தந்தையர்க்குப் புதல்வர் எனினும், அன்னார் குடி சிறக்க வழி நிற்கும் உரிமை பெறும் பிறங்கடையர் (வாரிசு) ஆகமாட்டார். அத் தந்தையர்க்கு வழித் தோன்றலாவார் அவருடன் பிறந்த பெண் வயிற்று மருகரேயாவர். ஆகவே, ஆண் மக்கள் தத்தம் மாமன்மார்க்கு மட்டுமே வழித் தோன்றல்களாகி நிற்பர்.

இவை பலவும் மருமக்கள்-தாய முறைக்கு நிலைக்களமாய், அதனோடு ஆட்சி பெறும் அற வழக்காம். இதை மறவாமல் மனத்து இருத்தித் தொன்னூல்களின் உதவி கொண்டு, ‘பழஞ் சேரர் பரம்பரையில் வழங்கியது இத்தகைய மருமக்கள்-தாயமா? நாம் ஆளும் மக்கள்-தாயமா?’ என்றதொரு சிற்றாராய்ச்சியில் இறங்குவோமாக.

3. சங்க நூற் சான்றுகள்

இவ்வாராய்ச்சிக்குத் துணையாகும் சான்றுகள் பல. அவற்றுள், சங்க நூல்கள் சிறந்தன. அவற்றுள்ளும் பதிற்றுப்பத்தே தலை சிறந்தது. சேரரைச் சோழ பாண்டியருடன் சேர்த்துப்பாடும் பிற நூல்கள் போலாது, இது முழுதும் தனியே சேரரையே பாராட்டுவதாகும். பத்துப் பழம் பெரும் புலவர் ஒவ்வொரு சேரனையும் பப்பத்துப் பாட்டில் பாராட்டிப் பாடிய பாக்களைத் தொகுத்துப் பதிற்றுப் பத்து எனும் பெயரால் நின்று நிலவ வைக்கப் பெற்றதொரு தொகை நூல் இது. இதில் முதற் பத்தும் இறுதிப் பத்தும் கிடையாமல் இடை எட்டுப் பத்துப் பாட்டுக்கள் மட்டுமே வெளி வந்துள்ளன. இவற்றின் ஒவ்வொரு பத்துப் பாட்டின் தொகை இறுதியில் அப்பாட்டுடைக் கோச் சேரனின் குடி வழியும் அவன் வெற்றி முதலியசில பிறசிறப்புக்களும் அடங்கிய பதிகம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சேரர் குலமுறை தெளிவதற்கு இப்பதிகங்கள் மிகவும் உபகாரப்படும். இப்பதிகப் பாட்டுக்களில் சேரர் குடி வழி கூறும் அடிகளையும் தொடர்களையும் ஆதரவாகக் கொண்டே பண்டிதர் பலரும் இதுகாறும் இச் சேரர் குலமுறை கிளத்தியுள்ளனர். அதனால் ஈண்டு அவ்வடிகளையும் தொடர்களையுமே முதலில் நாம் ஊன்றி நோக்கி, அவற்றின் பொருளும் குறிப்பும் ஆழச் சூழ்ந்து, தெளியக் கடவோம். அவை வருமாறு:—

1. முதற்பத்து :—முற்றுமே அகப்பட்டிலது.

2. இரண்டாம் பத்து :—இமைய வரம்பன் நெடுஞ் சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியது.

"மன்னிய பெரும்புகழ் மருவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு,
வெளியன் வேண்மாள் நல்லினி யீன்ற மகன்"

3. மூன்றும் பத்து :—பல்யானைச் செல் கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடியது.

"இமைய வரம்பன் தம்பி......................
....
பல்யானைச் செல்கெழுகுட்டுவனை"

4. நான்காம் பத்து :—களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது.

"ஆராத் திருவிற் சேர லாதற்கு,
வேள் ஆவிக் கோமான்
பதுமன் றேவி யீன்ற மகன்",

5. ஐந்தாம்பத்து :—கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவனைக் கரணம் அமைந்த காசறு செய்யுள் பரணர் பாடியது.

"வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்கு,
சோழன் மனக்கிள்ளி ஈன்ற மகன்"

6. ஆறும்பத்து :—ஆடு கோட் பாட்டுச் சேர லாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடியது.

"குடக்கோ நெடுஞ் சேரலாதற்கு வேளள்
ஆவிக் கோமான் றேவி யீன்ற மகன்"

7. ஏழாம் பத்து :—செல்வக் கடுங்கோ வாழி யாதனைக் கபிலர் பாடியது.

" மடியா வுள்ளமொடு மாற்ருர்ப் பிணித்த
நெடுநுண் கேள்வி யந்துவற்கு, ஒரு தந்தை
யீன்ற மகள்—பொறையன் பெருந்தேவி யீன்ற மகன்"

8. எட்டாம் பத்து :—பெருஞ் சேரலிரும் பொறையை அரிசில் கிழார் பாடியது.

" பொய்யில் செல்வக் கடுங்கோ வுக்கு,
வேளாவிக் கோமான் பதுமன்தேவி ஈன்றமகன்"

9. ஒன்பதாம் பத்து :—இளஞ்சேரலிரும் பொறையைப் பெருங்குன்றூர்கிழார் பாடியது.

" குட்டுவ னிரும் பொறைக்கு, மையூர் கிழாஅன்
வேண்மாள் அந்துவஞ் செள்ளை யீன்ற மகன்"

10. இறுதிப் பத்தும் இறந்ததே போலும்.

இவையிற்றை உற்று நோக்குங்கால், பதிகம் எட்டனுள் இரண்டு, நான்கு, ஆறு முதல் ஒன்பதான ஆறுபதிகத் தொடர்களால், அவ்வப் பதிகப் பாட்டுடைத் தலைவனை கோச் சேரன் ஒவ்வொருவனும் ஓரோர் கோமாள் (கோக் குடிப்பெண்) தன் கணவனுக்கு மகனும் மற்றொரு கோச் சேரனுக்கு வழித் தோன்றலுமாய்ப் பெற்றெடுத்து உதவிய பெரு மகனாகவே தோன்றுகிறான். மூன்றாம் பதிகமான மற்றொன்றும் அதனையே வலியுறுத்தும்.

ஏனெனில், அதில் பாடப் பெற்றவன் இரண்டா வதன் தலைவனான இமைய வரம்பனுக்குத் தம்பி எனப் படுவதால், இப்பதிகமும் இரண்டாம் பதிகச் செய்யுள் கூறும் குல முறையையே கூறுவதாகும். எஞ்சிய ஐந்தாம் பதிக அடிகள் சிறிது சங்கைக்கு இடனாக நிற்கின்றன. இதில் ஏதோ ஒரு சொற் குறைவு காணப்படுகின்றது.* அக்குறைவால் இப் பதிகத் தொடர் இதுவரை சிறிது பிறழ்ச்சி உணர்ச்சிக்கு ஒருவாறு இடம் தந்து வரு கிறது. இப்பதிகத் தொடர்களெல்லாம், பொருள் நேர்மையால் ஒரு திறப்படுமாயினும், சொன்னீர்மை யால் பல துறைப்பட்டு நிற்கின்றன. 4, 6, 8 பதிகங் கள் ஒருவகை; 2, 9, ஒருவகை; 3-ஆவது தனிவகை; 7-ஆவது ஒருவகை; 5-ஆவது ஒருவகை; ஆக இவை கள் இப்படிப் பலபட அமைந்து கிடப்பதால், இப் பதிகத் தொகுதியை இம் முறையிலேயே பகுத்துத் தனித்தனியே அவ்வத் தொடர் வகைகளின் சொல் லாற்றலையும், பொருளாக்கத்தையும் ஈண்டுச் சிறிது ஆழத் துருவி ஆராயப் புகுவோம்.

(i) பதிற்றுப் பத்து ௪, ௬, ௮-ஆம் பதிகத் தொடர்களின் பொருட் குறிப்பு

(1) முதலிலே நான்கு ஆறு எட்டுப் பதிகப் பாக்களில் அப்பாட்டுடைத் தலைவரின் தாய் அங்குப் பெயர் குறித்த சேரர் அல்லாத பெருந்தகையார் பிறர் ஒருவரின் தேவி யெனச் சுட்டப்பட்டிருப்பது சிந்திக்கத் தக்கது. இதுவரை இப் பதிகங்களைக்

* இம்மூன்றாம் பகுதியின் V. ஆவது உட்பிரிவைப் பார்க்க.

கொண்டு சேரர் குல முறை கண்ட பண்டிதர்கள், ஈண்டுத் 'தேவி' என்ற சொல்லின் ஆற்றலை விசாரியாமல் அது 'தநயை' என்னும் பொருளுடையது போலவே கருதிச் சென்றிருப்பதாகத் தெரிகிறது. இச் சொல், தெய்வங்களில் பார்வதி, காளி, துர்க்கை என்பாரையும் மக்கள் வருக்கத்துள் முறைப் பொருளில் மனைவியையும் மட்டுமே குறிப்பதாகும். 'தேவி' என்ற சொல்லுக்கு மனைவிப் பொருளல்லது, மகள் அல்லது தநயை என்ற பொருள் இல்லை. இலக்கியம் திவாகராதி நிகண்டுகள் முதலிய நூல்களில் மகட் பொருளில் இச் சொல்லுக்கு ஆட்சி இல்லை. எனவே, இச் சொல் இயல்பு வழக்கில் மனைவியையே சுட்ட வேண்டும். ஆகவே 4, 6, 8 பதிகங்களில் சுட்டப் படும் கோச் சேரர் தாய், வேள் - ஆவிக் கோமானின் மனைவியாக வேண்டும். அதனாலே இவள் வேறு சேரருக்கு மனைவியாய் இருந்திருக்க முடியாதாகும்.

(2) நார் முடிச் சேரல், ஆடு கோட் பாட்டுச் சேரலாதன், பெருஞ் சேரலிரும் பொறை என்ற மூன்று கோச் சேரர்களை ஈன்ற தாயை வேள் ஆவிக் கோமான் பதுமனின் தேவி என்றே இம் மூன்று பதிகங்களும் விசதமாக விளக்குகின்றன. எனவே, பதுமன் மனைவியான இக் கோப் பெரும் பெண்டு இப் பதிகங்களில் பாட்டுடைத் தலைவருக்கு முன் தோன்றல்களாகக் குறிக்கப்படும் சேரலாதன், செல்வக் கடுங்கோ என்ற இரு பெருஞ் சேர மன்னருக்கும் அறக்கிழத்தி யாமாறில்லை.

அன்றியும், தேவிச் சொல்லுக்கு இல்லாத தநயைப் பொருள் கொடுத்து வைத்து, வேள்-ஆவிக் கோமான் பதுமனுக்கு இவளை அவன் பெற்ற மகள் எனவே கொண்டாலும், இவள் இப்பதிகங்கள் சுட்டும் இரு வேறு சேரருக்கு இற்கிழத்தியாகும் முறை கொள்ளற்கு இல்லை.

(3) இம் மூன்று பதிகத்தும் குறிக்கப் பெற்ற வேள்பதுமன் ஒருவனேயாக வேண்டும். வெவ் வேறு வேண்மானைச் சுட்டுவதான குறிப்பு ஒன்றும் இவற்றுள் இல்லாத நிலைமையில் இவை ஒரு வனையே சுட்டும் எனக் கொள்ளுவதே முறையாகும். அன்றியும், பண்டிதர் திரு. மு. இராகவையங்கார் அவர்களும் பிறரும் இம் மூன்று பதிகமுமே ஆவிக் கோமான் பதுமன் எனும் ஒரு வேளிர் தலைவனையே குறிக்கும் என விளக்கியுள்ளார்கள். இயற் பொரு ளில் இப் பதிகத் தொடர்கள் சுட்டுகிறபடி இப் பதி கச் சேரரின் தாய் 'பதுமன் தேவி' ஆவளேல், சேர லாதன், கடுங்கோ, என்ற இருவர் தமக்கும் இவள் மக்கள் ஈன்ருள் என்று உரைப்பதற்கு தன் பதியா கும் பதுமனெடு மற்றிருவர் சேர்க்கையும் இவட்கு ஏற்றவேண்டும். பதுமனுக்கு இவளைத் தநயை எனக் கொள்ளினுமே இரு பெருங் கோச் சேரருக்கு அறத் துறையில் இவள் மக்கள் பெறுமாறில்லை. ஒருவேளை பெற்ருலும் அப் பெற்றி உலகறிய வசை நிற்கப் பாடாண் பாட்டில் அதைப் புலவர் பாட மாட்டார்.

(4) இவளை வேள் பதுமனுக்கு மகளாக்கிச் சேரர் பலர் சேர்க்கை இவட்கு எய்தாமல் அகற்ற விரும்புவோர்கள், பதுமற்கு ஈங்கு இரு மகளிர்ப்

பெறுவித்து, ஒருத்தியைச் சேரலாதற்கும் மற்றவளைக் கடுங்கோவுக்கு மாகப் பிரித்து மணம் புரிவித்து விழவு கொள்வர். மூலத்தில் இரு மகளிர் எனும் குறிப்பே எங்கும் இல்லை. மூவேறு பதிகத்தில் குறித்த வேள் - ஆவிக் கோமானை, மூன்றில் ஒன்றில் பதுமன் என்ற பெயர் குன்ற வந்திருந்தும், ஒருவனே எனத் துணியும் பண்டிதர்கள் மூன்றிடத்தும் ஒரு படியே 'ஆவிக்கோமான் தேவி' எனக் குறித்த கோமாட்டியார் ஒருத்தியல்லள். மூவரல்லர், இருவரே ஆவர் எனக் கொள்ளுவானேன்? ஆவிக்கோமான் மனைவியை இங்கு அவனுக்கு மகளாக்கி, பதுமனை முன் மணந்தவளை மறுபடியும் கன்னியாக்கிப் புது மன்றல் புரிவிக்க முயலும் போது, அதன் குறுக்கே வந்து புகும் ஆபாசத் தொல்லைகளை விலக்குதற்கு ஒருத்தி விழாப் போதாமல் அவள் தந்தைக்கு இரு மகளிர் உண்டாக்கி, இருவரையும் இரு சேரர்க்கு உரியராக்கி, அவர் தம்மால் மும் மக்கள் பெறுவித்து ஒருவகையாய் முறைப் படுத்த அவசியங்கள் எழுகின்றன. இவள் பதுமனுக்கு மனையாளாய் அவனுக்கே தநயர்களைப் பெற்றெடுத்துத் தன் கிளையில் சேரருக்குப் * பிறங்கடைய (as heirs) மருகர்களாய் உதவுவதால் கோமகட்குக் குறையில்லை; குடிப்பழியும் கூறற்கு இல்லை.

மேலும், ஏழாம் பத்துப் பதிகத்தில் இத் தேவிச் சொல் தெளிவாக மனைவிப் பொருட் குறிப்பிலேயே வந்திருப்பதும் இங்குச் சிந்திக்க வேண்டும். ஆண்டு எனைத்தானும் இச் சொல்லுக்கு மனைவியல்லாத எப்

* பிறங்கடை=வழித்தோன்றல்=வாரிசு; பிறங்கடைய= வாரிசான.

பொருளும் பொருந்ாது. "அந்துவற்கு ஒரு தந்தை ஈன்ற மகள் பொறையன் பெருந்தேவி" என்று கடுங்கோவை ஈன்ற தாயை அப் பதிக ஆசிரியர் விசதமாக விளக்கியுள்ளார். அந்துவன் தந்தைக்கு மகளும் பொறையனுக்குத் தேவியும் ஆவளென, அவளை ஈன்ற தந்தையோடும் கொண்ட கணவனோடும் தனித்தனியே அக் கோமாட்டிக்கே உள்ள தொடர்பை விளக்கும் முறைப் பெயர்களைப் புலவர் விதந்து பிரித்துக் கூறியிருப்பதால் தேவிச் சொல் ஆண்டு எவ்வகையிலும் மகளைக் குறிக்கவே முடியாது; மனைவியையே குறித்துத் தீரவேண்டும். பதிகங்கள் எல்லாம் ஒரு புலவரால் செய்யப் பெற்றன என்றே கொள்ளப் படுகின்றன. எப்படியும் எல்லாப் பதிகங்களிலும் ஒரே பொருளைக் குறிப்பதாய் ஒருபடியான சந்தர்ப்பத்திலே வரும் இத் தேவிச் சொல்லுக்கு யாண்டும் பொருந்துவதான மனைவிப் பொருள் ஒன்றையே இவ்வெல்லாப் பதிகங்களிலும் கொள்ள வேண்டும் என்பது நியதமாகிறது.

(5) இன்னும், இம் மூன்று பதிகத்துக் கோச் சேரர் தாயாரைப் பதுமனுக்கு மகளாயும், சேரருக்குத் தநயர் தரும் மனைவியாயும் குறிப்பதுவே ஆசிரியர் கருத்தாமேல், சேரரொடு இவளை மனையறக் கிழமை தரும் சொற் கொண்டு சேர்த்திருப்பர். பதுமனுக்குத் தநயை எனத் தெளிவிக்கும் சொற் பெய்யத் தவறி, மிகத் தடுமாறி மனைவியதன் மறு பெயரால் அவனொடு சேர்த்து ஈங்கு இவளைச் சுட்ட மாட்டார். இப் பதிகப் பாவலர் மூவருள் ஒருவர்

குறையா நிறையும், கணவன் பால் தூய காதலும் உடையராய்க் கற்பரசியராய்ப் புகழ் சிறந்த நச் செள்ளையார் என்ப. அத்தகைய பெருந்தகையார், நிறையிறந்து மணந்தவனைத் தணந்து, தன் பெண் இயலை மறந்து, பிற மன்னர் பலரைக் கூடி மக்களைப் பெறுபவளை வாயார வழுத்துவரோ? அல்லது அவள் இழி தகவைச் சுட்டித்தான் பாடுவாரோ?

(6) பாட்டுக்களில் பதுமனுக்குத் தேவி எனப் பகர்ந்த பின்னர், "அவன் தேவி சேரருடன் சேர்க்கையினால் அவர் தமக்கு மைந்தர்களைப் பெற்றாள்" என்று உரைத்து அவளைப் பழிப்பதுடன், அவள் ஈன்ற கோச் சேரர் மூவர் புகழும் மாசுபட மூன்று புலவரும் பாட மாட்டார். பாடினரேல், ஒறுப்பதை விட்டு அவர் பழிக்குப் பரிசில் தர அக் கோச் சேரர் மூவரும் கழி பித்தர்களாய் இருக்க வொல்லார். பாடினவர் பல வேறு புலவர் என்றும், பாடிப் பெற்ற பரிசில் அளவிறந்த தென்றும் இப் பதிகங்களே விளக்குவதைக் கருதுங்கால், பாடப் பட்ட கோச் சேரரின் குற்றமற்ற குடிப் பிறப்பினையும், அவர் தம் கற்பு நிறை தாய் வயிற்றில்—தந்தை வேண்மான் - ஆவிக் கோமாற்கு - மைந்தராய்ப் பிறந்து, தாய் வழியில் தலைசிறந்த சேரருக்கு மருகரென வழித்தோன்றி நின்று உயந்த குறிப்பினையும், இப் பதிகத் தொடர் நிலைகள் சுட்டுவதைத் தெளியலாகும்.

இனைய பல நினையுங்கால், நான்கு, ஆறு எட்டுப் பதிகங்களில் புகழப் பெற்ற கோச் சேரர் மூவரும் ஆவிக்கோமான் பதுமனுக்கே மைந்தரும், சேர

லாதன், செல்வக் கடுங்கோ இருவருக்கும் வழித் தோன்றல்களாய்ச் சிறந்த பெருமருகரும், தம் கோத் தாயின்வயிற்றுதித்து வளர்ந்த கோப்பெருமக்களும் ஆவர் எனத் துணிவதே கருமம் எனத் தோன்றக் காண்பாம்.

(ii) உ, கூ - ஆம் பதிகத் தொடர்ப் பொருட் குறிப்பு

(1) இனி இரண்டாவதாக 2, 9-ஆம் பதிகத் தொடர்களையும் அவை சுட்டும் பொருட் குறிப்பையும் நிதானித் தறிய முயல்வோம். இவை முறையே இமையவரம்பன் நெடுஞ் சேரலாதனை "உதியஞ் சேரலாதற்கு வெளியன் வேண்மாள்-நல்லினி ஈன்ற மகன்" என்றும், இளஞ் சேரலிரும் பொறையைக் "குட்டுவன் இரும் பொறைக்கு மையூர் கிழான் வேண்மாள்-அந்துவஞ் செள்ளை ஈன்ற மகன்" என்றும் கூறுகின்றன. 2, 9 பதிகங்கள் அப் பாட்டுடைத் தலைவரின் தாய்மாரை 'வேண்மாள்-நல்லினி', 'வேண்மாள்-அந்துவஞ் செள்ளை' என்று சுட்டுகின்றன. இவ் விடங்களில் வேண்மாள் என்னும் சொல் அத் தாய்மாரின் இயற் பெயரில்லை என்பது வெளிப்படை. 'நல்லினி, அந்துவஞ் சேள்ளை' என்பன அவர் தம் இயற்பெயரும், 'வேண்மாள்' என்பது அவ் விருவருக்கும் பொதுவாயதொரு சிறப்புப் பெயருமாய் இருக்க வேண்டும். "சிறப்பினாகிய பெயர் நிலைக் கிளவிக்கும்—இயற் பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" என்னும் தொல்காப்

பியச் சூத்திர விதிப்படி இவ்விரு இயற் பெயர்களுக்கும் முன் நிற்கும் 'வேண்மாள்' என்னும் பொதுச் சொல் 'கோமனைவி' என்னும் பொருளுடையதொரு சிறப்புப் பெயரே ஆதல் வேண்டும்.

(2) இன்னும் "வேண்மாள்" என்னும் சொல் கோவேந்தர் கோப் பெருந்தேவியையும், கோவியலார் முடி புனையாக் குறுமன்னர் தேவியரையும் குறிக்கும் ஒரு பொதுப் பெயராய்ப் பழந்தமிழ் இலக்கியங்களில் பல இடத்தும் வழங்கக் காண்பாம். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் தம் கோத்தமையன் செங்குட்டுவன் கோமனைவியை "வேண்மாள்" என்று சுட்டியுள்ளார். ஆண்டு அச் சொல் அத்தேவிக்கு இயற்பெயர் என்று நினைப்பவரும் சிலர் உளர். உண்மையிலே இது அவளுக்கு இயற் பெயர் அன்று என்று எளிதில் தெளியலாகும்.

" வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
விளங்கில வந்தி வெள்ளி மாடத்து
* இளங்கோ வேண்மாளுடனிருந் தருளி "

* தம்பியைச் சுட்டும் "இளங்கோ"த் தொடரையும் வேண்மாளோடு சேர்த்துச் செங்குட்டுவன் தேவிக்கு "இளங்கோ வேண்மாள்" எனும் தொடர் முழுதும் பெயராய் நிற்பது எனக் கொண்டு அதனால் அவள் கோத் தேவி (பட்டமகிஷி) யல்லள் என்றும், மன்னன் பின்னர் மணந்த காதற் கிழத்தியாய் இருக்க வேண்டும் என்றும் நினைப்பாரும் உளர். அவர் கருத்துக்குப் போதிய ஆதரவு இல்லாததோடு, அது பொருந்தாது என்பது சிலப்பதிகார அடிகளை ஊன்றி நோக்குவார்க்கு வெளியாகும். இளங்கோவடிகள் மாடத்தில் மன்னனுடனிருந்து மலை காணச் சென்று மீண்டதாய் அடிகளின் மருளற்ற செந்தொடர்கள் தெளிவிப்பதாலும், இளங்கோவடிகளைச் சுட்டாமல் கோத் தேவியைத் தனியே குறிக்கும் பிற இடங்களில் எல்லாம் இவ் விளங்கோ ஜ்

என்பன சிலப்பதிகாரக் காட்சிக் காதை அடிகளாகும். சேரர் பெருமான் இயந்திரவாவி எழில் மாடத்தில் தம்பி இளங்கோவோடும், தனது தேவியோடும் ஓலக்கத்து எழுந்தருளியிருந்தவன், மலைவளம் காணுவம் என அவர் இருவருடனும் பரிவாரங்களோடும் புறப்பட்டான் என்று சுட்டும் குறிப்பின இவ்வடிகள்.

இன்னும் செங்குட்டுவன் மனைவி இக்காட்சிக் காதையில் பின்னேரிடத்தில் 'மாபெருந்தேவி' எனவும், நடுகற் காதையில் மீண்டும் வாளா 'வேண்மாள்' எனவுமே குறிக்கப்படக் காண்கிறோம். இதனால் 'வேண்மா'ளும், 'மாபெருந்தேவி'யும்—'கோமனைவி' என்ற ஒரு பொருள் குறிக்கும் இரு விசேடணங்கள் என வெளியாகிறது. இவை இரண்டும் செங்குட்டுவனின் ஒரே கோமனைவியைக் குறிக்கும் இரு சிறப்புப் பெயர்களேயாகும்.

தொடர் தொடுக்காமல், வாளா "மாபெருந்தேவி" [காட்சிக் காதை—வரி 110] எனவும், "வதுவை வேண்மாள் மங்கல மடந்தை—மதியேர் வண்ணங் காணிய வருவழி" [நடுகற் காதை —வரி 51-52] என்ற அடிகளில் "'வேண்மாள்" எனவுமே அடிகள் கூறிப் போவதாலும், காட்சிக் காதையின் முதலில் வரும் மேற்குறித்த தொடரிலும், 'இளங்கோ' என்பது வேண்மாளுக்கு அடையாகாமல் இளங்கோ அடிகளையே குறிக்கும் என்பது மலை இலக்காம். மேலும், இளைய மனைவி என்ற பொருளில்'இளங்கோ வேண்மாள்' என்று குறிப்பதே அடிகள் கருத்தாமேல், அதே காதையில் பின் இவள் பெருங்கோப்பெண்டு என்பதை விசதமாக்கி, 'மாபெருந்தேவி' எனச் சுட்டியிருப்பது பொருந்தாததாகும். ஆதலாலும், இத் தொடர் இளங்கோ அடிகளையும் கோத்தேவியுமான வேண்மாளையுமே குறிக்கிறது என்பது தெள்ளிதில் கொள்ளக் கிடக்கிறது.

(3) மேலும், இளங்கோவுக்குச் செங்குட்டுவன் தமையன்; அதனால் குட்டுவன் கோத்தேவி அவருக்கு அண்ணியார் (மதினியார்) ஆகவேண்டும். தமிழகத்தில் தமையன்மார் மனைவியர் பெயரைத் தம்பியர் கூறுவது மரபு இல்லை; வழக்கும் இல்லை. கோவேந்தன் பெருந்தேவிக்கு உரிய மதிப்பும் தமிழ் மரபும் ஒருங்கே நின்று இளங்கோவடிகளை அவள் இயற்பெயரைச் சுட்டவொட்டாமல் தடுப்பது முறைமை. தமையன் பெயர் தன் பெயர்களைச் சொல்லுவதில் அத்தகைய தடை கிடையாது. அப்படி இருந்தும் இவ்விடத்தில் இவர்கள் இயற் பெயரைக்கூடக் கூறாமல், மன்னனை வாளா 'வானவர் தோன்றல்', 'கோதை' எனவும், தன்னை 'இளங்கோ' எனவும் கூறிப் போகும் அடிகள், மன்னவன் கோமனைவியை மட்டும் அவன் இயற் பெயர் கொண்டு சுட்டுவர் எனக் கொள்ளுவதில் பொருத்தமும் பொருளும் இல்லை.

(4) இதுவுமன்றி, இச்சொல் மன்னர் மனைவியரின் பொதுப் பெயராகும் என்பதை வலியுறுத்தும் சான்று சில இன்னும் உள. தொன்னூல்களில் 'நன்னன் வேண்மாள்' 'உதியன் வேண்மாள்' என்ற பிரயோகங்களைக் காணுகின்றோம். 'ஈண்டு, 'நன்னன்' 'உதியன்' என்ற சொற்கள் ஆண்பால் பெயர்கள் என்பது ஒரு தலை. அவற்றோடு 'வேண்மாள்' எனும் பெண்பால் பெயர் தொடருங்கால் நன்னன் தேவி, உதியன் தேவி என்றே பொருள் படும். அல்லாக்கால் இப்பெயர்த் தொடர்கள் பொருளற்ற சொல்லின் வெறுங் கூட்டமாகும். இத்தெளிவு

கண்டே மஹாமஹோபாத்தியாய சாமிநாதையர் அவர்களும் தம் அரும்பத அகராதியில் 'வேண்மான்' என்பதற்குச் சிற்றரசன் எனவும், 'வேண்மாள்' என்பதற்குச் சிற்றரசன் மனைவி—முடியுடையரசன் மனைவி எனவுமே பொருள் குறித்துள்ளார்கள். இவ்வாறு 'வேண்மாள்' எனும் சொல் கோவேந்தர் குறுமன்னர் மனைவியர்க்குப் பொதுப்பெயராக வழங்குவதால், அது ஒருவருக்கும் இயற்பெயரா காமல் சிறப்பு முறை குறிக்கவரும் பொதுப் பெயரே யாதல் வேண்டும் என்பது ஐயமற்ற துணிபாய்க் கொள்ளக் கிடக்கின்றது.

(5) வேண்மாள் என்பது இயற்பெயராமேல், பிறிது சொல் சார்பு வேண்டாமல் தன் நிலையில் நின்று அந்தப் பெயருடைய பெண்மகளைச் சுட்டல் கூடும். இவ்வாறு தனிவழக்கு இக்கிளவிக்கு எங் கும் இல்லை. வரும் இடங்கள்தோறும் இது ஆண் பால் சொற்கள் பிறவற்றைத் தழுவியே வரக்காணு கின்றோம். ஆண்பாற்பெயரோடு வாளா தொடருங் கால் அவ் ஆண்மகனுக்குத் தொடர்பு உடைய பெண் ஒருத்தியைச் சுட்டும் ஒரு சிறப்பு முறைப் பெயரா வதன்றி, தொடர்பு சுட்ட வேண்டாத இயற் பெய ராய்க் கொள்ளுவது பொருந்தாது; பொருள் தராது.

(6) ஆண்பெயரோடு பெண் ஒருத்தியின் இயற் பெயரைப் புணர்க்குங்கால், அவ் இருவருக்கும் உள்ள ஒருமுறை குறிக்கும் சொற் பெய்து விளக்கு வதே மரபாகும். இராமன் தேவி சீதை, இராமன் தாய் கோசலை, இராமன் மைத்துனி ஊர்மிளை

என்று ஒரு முறைப் பெயர்த் தொடர்பு கொண்டே இருபாலர் இயற்பெயர்த் தொடர்கள் வழங்கப் பெறும். முறை சுட்டாமல் வாளா இராமன் ஊர்மிளை என்று இரண்டு இயற்பெயர்களைத் தொடுத்தால் ஒரு பொருளும் அறியாமல் மருளுதற்கே ஏதுவாம். அத்தகைய பிரயோகம் வழக்காறில்லை; மரபிறந்த தவறுமாகும்.

(7) ஈண்டு இரண்டு ஒன்பது பதிகப் பாட்டுக்களில் 'வெளியன் - வேண்மாள்' 'கிழாஅன் - வேண்மாள்' என்று ஆண் பெயர்களோடு தொடர்ந்து பிற சொல் சார்பின்றி நிற்றலால், வெளியன், கிழாஅன் இவ்விருவருக்கும் தனித்தனியே ஒரு தொடர்புடைய பெண்களுக்கு "வேண்மாட்" சொல் முறைப் பெயராய் அமைவது அங்கையில் நெல்லி போல் தெளியப்படும். மற்றைய 4, 6, 8 பதிகங்களில் 'பதுமன் தேவி' 'ஆவிக் கோமான் தேவி' என்று இருப்பதே போல், ஈண்டும் 'வெளியன் வேண்மாள்' 'கிழாஅன் வேண்மாள்' எனவே வருவதால், தேவிப் பொருளிலேயே வேண்மாட் சொல்லும் நிற்கிறதென்று ஒருதலையாகத் துணியப்படும்.

(8) இனி, முறைப்பெயராய்க் கொண்டாலும், இதற்கு மனைவிப் பொருளைக் கொடுப்பானேன், மகட் பொருளிலேயே இதைக் கொள்ளுவோம் என்பார்க்குச் சொல்லுவேம். மகள் என்னும் பொருளில் இச்சொல்லைக் கொள்ளற்கு இல்லை. தம் தமையன் செங்குட்டுவன் தேவியை இளங்கோவடிகள் வேண்மாள் என்று உரைப்பதாலும், மகட் பொருளில் யாண்டும் இதற்கு ஆட்சி இல்லாத

தாலும் மனைவியையே வேண்மாட் சொல் குறிப்ப தாகும்.

(9) பதிற்றுப் பத்தின் பதிகங்களைச் செய்தவர் ஒருவரே என்பது அப்பதிக இயல்பால் புலப்படுவ தாகும். திரு. மு. இராகவையங்கார் அவர்கள் போன்ற பண்டிதரும் அப்படியே கொள்ளுகின் றூர்கள். இஃது எப்படி இருப்பினும், இந்நூலில் ஐந்தொழியப் பிற பதிகங்களில் எல்லாம் ஆசிரியர் ஆண்பாற் சொற்களோடு 'தேவி' 'வேண்மாள்' என்ற சொற்களை நிறுத்தி, அவை கொண்டே அங்குக் குறித்த பெண்களுக்கும் ஆண்களுக்கும் உள்ள முறையை விளக்கிப் போவதனால், இச் சொற்கள் இரண்டுமே 'மனைவி' என்னும் ஒரு பொருளில் முறைப் பெயராய் வருமாறு தெளியக் கிடக்கின்றது. இவ் அமைப்பால் 'தேவி' 'வேண் மாள்' என்ற இரு சொல்லும் ஒரு நிலையில் ஒன்றை ஒன்று விளக்கி இரண்டிற்கும் மனைவி எனும் ஒரே முறைப்பொருள் உண்மையை வலியுறுத்தும். சுருங்கச் சொல்லின், வேண்மாள் என்பது வேண் மானின் பெண்பாலாம். வேண்மான் என்னும் சொல் சிற்றரசரான வேளிர் அல்லது குறுமன்னருக் குப் பொதுப்பெயர் என்று அறிவோம். ஆகவே வேண்மாள் என்பது குறுமன்னர் தேவியர்க்குப் பொதுப் பெயராய், கோவேந்தர் மனைவியர்க்கும் சில இடத்தே முறைப் பெயராய் வழங்கும் என அறியலாகும்.

(10) 4, 6, 8 பதிகங்களில் தேவி என்னும் முறைப் பொதுப் பெயர் மட்டும் நின்று, அம்முறை

உடையாளான பதுமன் தேவியின் இயற்பெயர் சுட்டப்பெருமல் இருக்கிறது. 2, 9 பதிகங்களிலோ வேண்மாள் என்ற முறைப்பெயரோடு 'நல்லினி' 'அந்துவஞ் செள்ளை' எனும் இயற்பெயர்கள் தொடர்ந்து 'வெளியன் மனைவி நல்லினி' 'மையூர் கிழாஅன் மனைவி அந்துவஞ்செள்ளை' எனத் தெளிக்கப் படுகின்றது. இங்கு இவர்கள் இயற் பெயரைத் தனித்தனியே விளக்குவதால் இருவருக் கும் பொதுவான வேண்மாட் சொல் முறைப்பெயரே ஆவதனை முன்னரே விளக்கியுள்ளோம்.

(11) இன்னும் 'வேண்மான்' என்பதற்குச் 'சிற்றரசன்' என்றும், 'வேண்மாள்' என்பதற்குச் 'சிற்றரசன் மனைவி—முடியுடை அரசன் மனைவி' என்றுமே பதிற்றுப்பத்து அரும்பத அகராதியில் மஹாமஹோபாத்தியாய சாமிநாதையர் அவர்கள் பொருள் குறித்துள்ளார்கள். அதனுலும் இச்சொல் இப்பதிகங்களில் சிற்றரசரான வெளியன், மையூர் கிழான் என்ற வேளிர்களின் மனைவிமாரையே சுட்டு கின்றது என்று துணியலாகும்.

(12) இவை பலவற்ருலும், இப்பதிகங்களில் வரும் வேண்மாட் சொல் மனைவிப் பொருளையே குறிக்கு மென்பது விசதமாகும். ஆகவே இரண் டாம் பதிகத்தால் வேள் வெளியனுக்கு 'நல்லினி' மனைவி என்பது விளங்குகிறது. இனி, இப்பதிகத் திலேயே இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன் வேள் வெளியனுக்கும் அவன் வேண்மாள் நல்லி னிக்கும் மகன் என்று சொல்லப் படுதலால் அவன் உதியஞ் சேரலாதற்கு மகனுமாறில்லை. மருகனே

ஆவன் எனத் தெளிகின்ருேம். அதுவேபோல் 9-ம் பதிகத்தாலும் இளஞ்சேரல் இரும்பொறை வேள் மையூர் கிழானுக்கும் அவன் தேவி அந்துவஞ் செள்ளைக்கும் மைந்தனாய், குட்டுவன் இரும் பொறைக்கு மருகனே ஆவன் என அறிகின்ருேம். "குட்டுவன் இரும் பொறை—குடக்கோ இளஞ் சேரலிரும் பொறையின் மாமன்" என்று மஹா மஹோபாத்தியாய பிரும்ம ஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள் பதிற்றுப்பத்தின் அரும்பத முதலியவற்றின் அகராதியில் காட்டி யிருப்பதும் இதனை வலியுறுத்தும்.

(iii) ௩-ஆம் பதிகத் தொடர்ப் பொருட் குறிப்பு

இனி மூன்றும் பதிகத்தைப் பற்றிய தொல்லை யில்லை. அப்பதிகத் தலைவனை பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பதிக ஆசிரியர் வாளா 'இமய வரம்பன் தம்பி'என்றே சுட்டி அமைவதனால், அவன் தமையன் 2-ஆம் பதிகத் தலைவனை நெடுஞ் சேரலாதனைப் போலவே, வேள் வெளியனுக்குத் தநயனும் உதியஞ் சேரலாததற்கு மருகனும் ஆவன் என்பது எளிது அறியக் கிடைப்பதாகும்.

(iv) ஏழாம் பதிகத் தொடர்ப் பொருட் குறிப்பு

ஏழாம் பதிகத் தொடரோ, நெடுங்கால இருள் அகற்றிச் சேரர் குடித் தாயவழி உண்மை முறையைத் துலக்கும் ஒளி விளக்காய் இருக்கிறது. இவ் உண்மை அறிதற்கு இது மிகவும் துணையாவதாய்த்

தோன்றுவதால் அதனைச் சிறிது ஊன்றி ஆராய வேண்டுவது மிகவும் அவசியம். இக்கிளை முறை கிளத்தும் தொடராவது: - "அந்துவற்கு ஒரு தந்தை ஈன்ற மகள்-பொறையன் பெருந்தேவி-ஈன்ற மகன்" என்பதே. இதில் பாட்டுடைத் தலைவனை செல்வக் கடுங்கோவை ஈன்ற தாயைப் 'பொறையன் பெருந்தேவி' எனவும், 'அந்துவற்கு ஒரு தந்தை ஈன்ற மகள்' எனவும் இப்பதிக ஆசிரியர் தெரிவித்துள்ளார். இவர் கபிலர் எனவே கொண்டால், கபிலர் பொய்யா நாவின் புலவர் ஆதலால், அவர் கூறுவது மெய் என்பது ஒரு தலை. யாவர் கூற்றாயினும் இத்தொடர் கூறும் பொருளைத் தெளிய முயல்வோம்.

முதலில் இத்தொடரில் அந்துவனும், கடுங்கோவின் அன்னையும், ஒரு தந்தை ஈன்ற மக்கள் என்பது துளக்கமற விளக்கப்படுகிறது. அதனால் அந்துவஞ்சேரற்கு அவள் சோதரியாவள் என்பது அறிகின்றோம். அதுவுமன்றி அவள் அடுத்து உடனே பொறையன் தேவி எனவும் விதந்து விசேடிக்கப்படுகிறாள். அதனாலும் முற்கூறிய அந்துவற்கு அவள் மனைவியாமாறில்லை. இத்தொடர் இறுதியில் இவள் ஈன்ற கடுங்கோ அந்துவற்கு மகன் எனவும் சுட்டப்படுகிறான். இந்நிலையில் இவள் அந்துவற்கு மைந்தன் ஈன்று தருவது எப்படி? பொறையனுக்கு மனைவி யாதலாலும், அந்துவனின் தந்தைக்கு மகளாகவே—அந்துவனுக்கு இவள் சோதரி ஆவதாலும், இவள் அவனை மணந்து மகப்பெற முடியாது. மணவாக் காதலனாக

அவனைக் கூடிக் கடுங்கோவை ஈன்றாள் என்றால், அது அவளையும் அவள் குடியையும் சுடும் பழியாவ தல்லால், சேரர் குலம் தழைய அவள் மகன் ஈன்று தந்தாள் என நன்மக்களால் புகழத் தகுதி அன்றாம். அவள் பெற்ற கடுங்கோவை அந்துவற்குத் தநய னுக்குவதால் அவளுக்குச் சகோதரனுடன் விபசார தோஷம் சம்பவிக்கும். இத்துணை விபரீதம் விளைக் கும் இக்கருத்தைவிட்டு வேறு செம்பொருள் உண் டாயின் அதைக் கொள்ளுவதே நமது கடமை யாகும்.

இவ் வாக்கியத்தில் வந்துள்ள விசேடணச் சொற்களின் நிலையும் அமைப்பும் விபரீதப் பொரு ளுக்குச் சிறிதும் இடமின்றி உண்மையை எளிதில் தெளிவிக்கின்றன. முதலில் கடுங்கோவின் தாயை அந்துவனின் தந்தை மகளென்று கூறியதோடு அமையாமல், மீண்டும் அவளைப் பொறையன் தேவி என இடைத்தொடர் கொடுத்தும் விசேடித்திருப்ப தால் புலவர் கருத்துச் சந்தேக விபரீதங்களுக்குச் சிறிதும் இடம் தராமல் விளங்குகிறது. அந்துவனின் சோதரியும் பொறையனின் மனைவியுமான கோமாட்டி கடுங்கோவைப் பெறுகின்றாள். அவள் பெற்ற கடுங்கோவே, பொறையனுக்குத் தநயனும், அந்துவற்குப் பிறங்கடையாம் மருமானும் ஆகின் றான். தெளிவான இத்தொடர்மொழிப் பொருளை மாற்றிக் கடுங்கோவை அந்துவனுக்கு மகன் எனவே கொள்ளப்புகின், "ஒருவனே மற்றொருவனுக்கு ஒருங்கே மகனும் மருகனும் ஆவன்" என ஒரு அபூத அசம்பாவித விபரீதத்தைக் கூறுவதாக முடியும்.

எப்படியும் இத்தொடரில் 'தேவி' என்பதற்கு மகள் எனப் பொருள் கொண்டு இவளைப் பொறையனுக்கு மகளாக்க இடம் இல்லை. தமிழ் வழக்கில் 'தேவி'ச் சொல் முறைப் பெயராக "புதல்வி"ப் பொருளில் ஆட்சிபெருது என்பதை மேலே (40, 41- ஆம் பக்கம் ௩ - ஆம் பகுதி i-ஆவது உட் பிரிவில்) காட்டியுள்ளேன். "இவள் தந்தை பொறையன் அல்லன்; பொறையன் தேவியான இவளுக்குப் பொறையனல்லாத வேறு ஒரு தந்தை உண்டு" என்றே பதிற்றுப்பத்துப் பழைய உரை காரரும் பதிப்பாசிரியர் மஹாமஹோபாத்தியாய சாமிநாதையர் அவர்களும் கருதுகிருர்கள். இதனை, 'ஒரு தந்தை - பொறையன் தேவியின் பிதா' என்ற அவர்கள் உரைக்குறிப்பு விளக்குகின்றது.

'பொறையன் பெருந்தேவி' எனும் தொடர் கொண்டு பொறையனை இவளுக்குத் தந்தை எனக் கொள்ளக் கூடுமாயின், 'ஒருதந்தை' என்றதற்குப் "பொறையனுகிய ஒரு தந்தை" என்று இவர்கள் பொருள் கூறியிருக்க வேண்டும். அதை விட்டுப் 'பொறையன் தேவியின் பிதா' என்று பொருள் உரைக்க மாட்டார்கள். அவ்வாறு இவர்கள் பொருள் கொண்டிருப்பதால், 'தேவி' என்ற சொல்லுக்கு மகள் என்னும் பொருள் இவர்களுக்கு ஒவ்வாமையும், மனைவி என்ற பொருளே இவர்களுக்கு உடன்பாடும் ஆவதனை அறிகின்ருேம். ஆகவே, கடுங்கோவின் தாய், வேண்மான் பொறையனுக்கு மனைவியும், அந்துவன் தந்தைக்கு மகளுமே ஆவள் என இப்பதிகத் தொடரால் தெளிகிருேம்.

அன்றியும், இத்தகைய ஐயம் எதுவுமே நிகழா வண்ணம் நிறுத்த சொல் பெய்து புலவர் இதன் மெய்ப்பொருளை விளக்கிவைத்திருக்கிறார். அந்துவன் தந்தைக்குக் கடுங்கோவின் தாய் மகள் என முதலில் கூறினர். 'மகள்' எனும் சொல்லுக்கு மனைவி பெண், தநயை எனப் பலப் பொருள் உண்மையால், பிற பொருந்தாப் பொருள்களை விலக்கி இவள் அவனுக்குத் தநயை என்பதைத் தெரிவிப்பதற்கு மகளுக்கு முன் 'ஒரு தந்தை ஈன்ற' என்ற அடை கொடுத்தார். எனவே, இவள் அந்துவன் தந்தைக்கு மனைவி அல்லள். அவன் பெற்ற தநயையே ஆவள் என்பது மலையிலாக்காகிறது.

இனி, மகட் சொற்போலவே, தமிழில் மகன் எனும் மொழியும் ஆண்மகன், கணவன், வழித் தோன்றலாம் மருமான், புதல்வன் எனப் பல பொருள்களில் வரும். ஆதலால் இத்தொடர் இறுதியில் 'பொறையன் பெருந்தேவி ஈன்ற மகன்' என்ற இடத்தில் 'மகன்' என்ற சொல்லுக்குப் பொருள் என்னை? இவ்விடத்து இச்சொல்லின் பொருத்தம் என்ன?—என்பன சிந்திக்கத்தக்கனவாம். அந்துவன் தந்தை பெற்ற புதல்வியாய்ப் பொறையனை மணந்த தேவி ஈன்ற கடுங்கோ தன் தாயை மணந்த பொறையனுக்குப் புதல்வனும், தன் மாதுலனை அந்துவனுக்கு வழித் தோன்றலான மருமானு மாவன். இவ் ஈரியைபையும் விளக்க மகன் என்னும் ஒரு சொல்லே அமைவுடையதாதலின், இப்பதிகப் புலவர் ஈண்டு அச்சொல்லைப் பெய்து வைத்தார். இதனை இக் கட்டுரையின் இறுதிப் பகுதியில்

விசதமாக ஆராய்வதால் ஈண்டு விரியாது இம் மட்டில் நிறுத்துகின்றேன்.

அப்படியே இவள் பெற்ற மகன் அந்துவற்குத் தநயனல்லன், மருகனே ஆவன் என்று தெளிவிப் பதற்காகப் புலவர் மீண்டும் இவளைப் 'பொறையன் தேவி என்று விசேடித்து 'ஒரு தந்தை ஈன்ற மகள் என்பதற்கும், (இவள்) 'ஈன்ற மகன்' என்பதற்கும் இடையே விசேடணம் (அடை) கொடுத்துப் பிரித்து நிறுத்துகின்றூர். இவ்வாறு அந்துவன், பொறையன் கடுங்கோ ஆகிய மூவருக்கும் இவளுக்கும் உள்ள முறை நிரல் நிறையே தெளிக்கப்படுகின்றது. இவள் முதல்வனுக்குச் சோதரி, நடுவனுக்கு மனைவி, கடை யனுக்குத் தாய் என்பது வெள்ளிடை மலையாம். எப்படியும் இத்தொடரால் அந்துவனுக்குக் கடுங் கோவின் தாய் மனைவியாதல் இயலாது என்பது ஒருதலை; எனவே அவனுக்கு இவன் தநயனுகான். வழித் தோன்றவான மருமானே யாக வேண்டும் என்பது தெளியக் கிடக்கின்றது. மருமக்கள்- தாயத்தைச் சுட்டும் சான்று இதைவிட வேறு எப் படிக் காணமுடியும். இத்தொடர் மக்கள்- தாயத் தோடு அமைவுபெற மறுக்கின்றது. கடுங்கோவை அந்துவனுக்கு மகன் என்று கொள்ள இத்தொடர் எவ்வாற்ருனும் இடம் தரவில்லை; மருகன் எனும் ஒரு பொருளே இத் தொடருக்கு ஒருதலையாய் அமைந்த பொருள் என்பதை இத்தொடர் மொழி கள் நின்று பறையடிக்கின்றன. இப்பொருளில் பிற பதிகத் தொடர்கள் எல்லாம் இதனேடு பொருந்தக் காண்பாம். பிறிது பொருளுக்கு இப்பதிகம் இடம்

தராது. இந்நிலையில் இவையெல்லாம் ஒருங்கு நின்று தெளிவிப்பது மருமக்கள் - தாயமன்றி மக்கள்-தாயம் அன்று என்று விளக்கமாகும்.

(V)—ரு ஆம் பதிகத் தொடர்ப் பொருட் குறிப்பு

(1) இனி, எஞ்சி நிற்கும் 5-ஆம் பதிகம் ஒன்று ஆராயக்கிடக்கின்றது. அதன் பொருளையும் ஒருவாறு அளந்து அறிய முயலுவோம். இதில் கிளைகிளத்தும் தொடர் "நெடுஞ் சேரலாதற்கு, சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்" என்று நிற்கிறது. இதில் நிரப்ப வேண்டிய சொற்குறை உண்மை புலப்படுகிறது. நிற்கிறபடி இச்சொற்றொடரில் பொருத்தமும் பொருளும் இல்லை.

(2) இதுவரையில் இப்பதிகத் தலைவனை செங்குட்டுவனை நெடுஞ்சேரலாதற்கும் சோழன் மகள் மணக்கிள்ளிக்கும் பிறந்த மகனென்று இத் தொடர் குறிப்பதாகப் பலரும் கொண்டு அமைந்தனர். அதாவது:—செங்குட்டுவனுக்குச் சேரல் ஆதனைத் தந்தையும் சோழன் மணக்கிள்ளியைத் தாயுமாகக் கருதிவந்தனர். இம்முறைக்கு வேறு ஆதாரமிருந்தால் அதைக் கண்டபோது விசாரிப்போம். இதுவரையும் பலரும் இத்தொடர் ஒன்றையே இதற்கு ஆதரவாக எடுத்து ஆளப் பார்க்கின்றோம். இத்தொடர் இப்பொருள் தருமாறில்லை என்பது மட்டும் இதைச் சிந்திக்கப்புகுந்தவுடன் தெளிவாகிறது.

(3) இப்போது நிற்கும் நிலையில் இத்தொடரில் செங்குட்டுவன் தாய் (பெயர்) குறிக்கப்படவில்லை. 'சோழன் மணக்கிள்ளி' ஆண்பாற் பெயர்; அதனால் செங்குட்டுவனின் தாய் பெயர் ஆக மாட்டாது. மணக்கிள்ளி என்பது அவன் தாயின் இயற்பெயராகவும், அவளை ஒரு சோழன் மகளாகவும் சிலர் கருதுவர். மணக்கிள்ளி என்னும் சொல் ஒரு பெண்பாற் பெயராய் யாண்டும் வழங்கக் காணற்கில்லை. அதற்கு மாருகப் பல இடத்தும் கிள்ளி என்பது ஆண்பாற் பெயராய்ச் சோழ மன்னர் பலருக்குரிய சிறப்புப் பெயராய் வழங்கி வருவது பிரசித்தம். 'வென்வேற்கிள்ளி', 'நெடுங்கிள்ளி', 'கழற்கிள்ளி' 'நெடுமுடிக் கிள்ளி', 'வடிவேற் கிள்ளி' 'இளங் கிள்ளி', 'மாவண்கிள்ளி' எனப் பல பெயருடைய சோழ வேந்தரைச் சுட்டும் பாட்டுக்கள் சங்க நூல்களில் பல காணலாம். இப்படிச் சில மன்னரின் சிறப்புடைப் பெயராவதும் அன்றி, சோழர் குடி அரசருக்கே இது நிலைத்த ஒரு பொதுப் பெயராகவும் துலங்குகிறது. திவாகரத்தில், கோச் சோழன் பெயர்-"சென்னி வளவன், கிள்ளி, செம்பியன்" என்று சேந்தனர் கூறிப் போவதனல், இச் சொல் சோழ மன்னவர் பொதுப் பெயராதல் தெளியப்படும். ஆகவே இப்பதிகத் தொடரில் "மணக்கிள்ளி" என்பது, யாதொரு பெண்ணையும் குறியாமல் சோழன் பெயராகவே நிற்பது எனக் கொள்ளுதலே முறைமையாகும்.

(4) பின்னும் மற்றைப் பதிகங்களில் எல்லாம் பாட்டுடைத் தலைவரின் தாய்மார் பெயர் சுட்டினும்

சுட்டாவிடினும், அவ்வவரின் தந்தையர் பெயர் தவருமல் சுட்டப்படுவது கவனிக்கத்தக்கது. அதன் சிறப்புக் காரணத்தைப் பின்னர் விசாரிப்போம்.* இவ்விடத்தில் மற்றப் பதிகப்போக்குக்கு மாருக 5-ஆம் பதிகத்தில் மட்டும் தந்தை பெயரைச் சுட்டாமல் விடவும், தாயை மட்டும் மணக்கிள்ளி என விதந்து கூறவும் தனிக்காரணம் ஒன்றும் இல்லை. பதிகங்களெல்லாம் ஒரே ஆசிரியர் செய்தன வென்றே ஆராய்ச்சியாளர் அனைவரும் ஊகிக்கின்றனர். இப்பதிகப் புலவர் பிற இடங்களில் எல்லாம் தாம் கொண்ட முறையை இங்குமட்டும் கை விடக் கருதுவானேன்? அவர் நன்று என யாண்டும் கையாண்ட ஒரு துறையை நெகிழாமல் இப்பதிகத்திலும் பின்பற்றியதாகக் கொள்வதே முறையாகும்.

மற்று எல்லாப் பதிகங்களிலும் பாட்டுடைத் தலைவரின் தந்தையர்க்குரிய இயற்பெயரும் சிறப்புப் பெயரும் ஒருங்கே கூறப்படுகின்றன. அதுபோல் இதிலும் கூறப்பட்டிருக்க வேண்டும் எனக்கொள்ளுவது நியாயமாகும். அம்முறையில் சோழன் என்ற சிறப்புப் பெயரின் பின் மணக்கிள்ளி என்று அவன் இயற்பெயர் சொல்லப்படுவது அவசியமும் பொருத்தமும் ஆகும்.

(5) இன்னும் அடியார்க்கு நல்லாரும் பிறரும் செங்குட்டுவன் தாய் பெயர் நற்சோணை என விதந்து கூறுகின்றனர். யாண்டும் அவர் மணக்கிள்ளி என்பது அவள் பெயர் எனச் சுட்டவில்லை. இவை பலவற்ருலும் ஈண்டு மணக்கிள்ளி என்பது செங்குட்டு

---

* 4-ஆம் பகுதி 4-ஆவது உட்பிரிவில் காண்க.

வன் தந்தை பெயராக வேண்டும் என்பதே நிலை பெறுகிறது.

(6) ஆனால் சோழன் மணக்கிள்ளி சேரலாதற்குத்தானே மகப் பெறமாட்டான். ஐயனாரைப் பெறுவிக்கும் ஹரிஹரக் கூட்டம் மக்களுக்கு இல்லை. பெண் இன்றி இரு புருடர் தம் அளவில் புத்திரப் பேறு எய்தற்கு இல்லை. அதனால், செங்குட்டுவனை ஈன்ற தாயைச் சுட்டும் சொல் ஒன்று இத்தொடரில் இருக்க வேண்டுவது அவசியம்.

(7) இனி, மணக்கிள்ளியைப் பெண் பெயராகவே கொள்வதானாலும்கூட அப்பெயருடைப் பெண்ணுக்கும் சோழனுக்கும் உள்ள முறை குறிக்கும் சொல் எதுவும் இல்லாததால், இத்தொடருக்குப் பொருள் இல்லாதாகிவிடும். இரு வேறு பாலார் இருவர் இயற்பெயர்களின் வெறும் தொடையால் அவர்களின் முறை யியைபு தெளியுமாறில்லை. ஆகையால், எப்போதும் அப்பெயர்த் தொடர்கள் தம்மிடை இயைபுடைய முறைப் பெயரைப் பெறின் அல்லால் பொருள் தராவாம். அதனாலும் இங்கு ஒரு சொற்குறைவு தெளியப்படும்.*

---

* "'சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்' என்ற இச்சொற்றொடர் நின்றபடியே நல்ல பொருள் அமைவுடைத்து. பொருள் குறை நிறைப்பதற்காக யாதொரு சொல்லும் இங்குப் பெய்து கூட்டற்கு அவசியம் இல்லை" என்று இவ்வாராய்ச்சிக் கட்டுரைக்குப் பண்டிதர் திரு. மு. இராகவையங்கார் அவர்கள் எழுதி வெளியிட்ட கண்டனத்தை மறுத்து (செந்தமிழ்த் தொகுதி ௨௮ பக். ௨௭௭-௩௨௧-இல்) மதுரை உயர்நீதி மன்ற வழக்கு வல்லார் திரு. கிருஷ்ணசாமி பாரதியார் தாம் வெளியிட்ட மறுப்புரையில், விளக்கிப் போந்தனர். ஒருவாறு இதில் சிறிது உண்மை உண்டுதான்.

(8) மேலும் 4, 6, 7, 8 பதிகங்களில் தேவி என்றும், 2, 9 பதிகங்களில் வேண்மாள் என்றும் முறைப் பெயர்கள் நின்றே அத்தொடர்கள் பொருள் பயத்தலால், அங்ஙனமே இவ்விடத்தும்

" 'நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்' எனும் தொடர் நின்றபடியே நல்ல பொருள் தரக்கூடியதேயாம். செங்குட்டுவனைப் பெற்ற தாயைக் குறிக்கும் சொல் பெயல் இன்றியமையாததன்று" என்றும், "அவ்வரசன் தந்தை சோழன் மணக்கிள்ளி தனக்கு மகனாகவும், சேரலாதற்கு வாரிசான மருமானாகவும் செங்குட்டுவனை ஈன்று உதவினன்' என்று இத்தொடரே விசதமாக்குவதாலும் செங்குட்டுவனை ஈன்ற சோழன் மணக்கிள்ளி எவ்வாற்றானும் சேரலாதற்கு மனைவியாதல் கூடாதென்பது வெளிப்படையாதலானும் மக்கள்-தாயத்தை மறுத்து மருமக்கள்-தாயத்தை வலியுறுத்த இப்பதிகத் தொடரே ஏனைய பதிகத் தொடர்களைவிட மிகவும் உபகாரப் படுகிற நிலையில், இத்தொடரில், 'தேவி', 'வேண்மாள்' என்ற மனைவிப் பொருள் குறிக்கும் சொல் ஒன்றைச் 'சோழன் மணக்கிள்ளி' என்பதை அடுத்துப் பெய்து அமைக்கவேண்டாவாம்" என்றும், அம்மறுப்பு உரைகாரர் கருதுவதில் பொருத்தமும், பொருளும் இருக்கிறது என்பதில் ஐயம் இல்லை. எனினும், பிற பதிகங்களிலெல்லாம் கோச்சேரர் குடிப்பிறந்து, பிற குறு மன்னரை மணந்து, சேர மன்னருக்கு அவர் பழங்குடி தழைய வழித் தோன்றலாம் மருமான்மாரை ஈன்று உதவும் தாய்மாரை ஒருபடியே சுட்டி, தந்தையொடு தாய்மாரையும் புலவர் விதந்து பாடியிருக்கும் மரபை இப்பதிகத்தில் மட்டும் நெகிழவிட்டுச் செங்குட்டுவனுக்குத் தாயைச் சுட்டாது தந்தை சோழன் மணக்கிள்ளியை மட்டும் குறித்தார் என்று கொள்ளப் போதிய ஆதாரம் இல்லை. மேலும், நற்சோணை என்பாள் செங்குட்டுவன் தாய் என அடியார்க்கு நல்லாரும், அவளை 'ஞாயிற்றுச்சோழன் மகள்' என இளங்கோவும் கூறுவதாலும் ஆண்டு 'மகள்' என்பது மனைவிப் பொருள் என்பதை இக்கட்டுரையில் கீழே ௩-ஆம் பகுதி vi-ஆவது உட்பகுதியில் விசதமாக்கியிருப்பதாலும், பதிற்றுப்பத்தின் மற்று எல்லாப் பதிகத் தொடர்களுடன் அடைவுபட இவ்விடத்தும் அமைவதாகக் கோடலே சால்புடைத்து எனக் கருதி நான் இத்தொடரிலும், மனைவி முறை குறிக்கும் தேவிச் சொல் போன்றதோர் சொற் குறையுண்டு எனவே கொண்டு அதைப் பெய்து அமைப்பதே முறையெனக் கருதுகிறேன்.

அவை போன்றதொரு முறைப் பெயர்ச்சொல் இன்றியமையாததாகும். அதுவும் மற்றைப் பதிகங்களில் வந்து அமைந்த முறைப்பெயர்ச்சொல் பொருள் உடையதாக இருத்தலேபொருத்தமாகும். எனவே, அது வேண்மாள், தேவி என்பவற்றுள் ஒன்ருகக் கொள்ளுவது தவருகாது. தேவி என்ற சொல் மணக்கிள்ளிக்கு முன் அல்லது பின் நிற்க வேண்டும். முன் வைப்பின் மணக்கிள்ளிச் சொல் பொருள் இன்றி நின்று வற்றும். அது பெண் பெயர் ஆகாமையையும் சோழன் பெயராக வேண்டும் என்பதையும் மேலே தெளிந்தோம். ஆதலால் தேவி போல்வதொரு முறைப்பெயர். 'மணக்கிள்ளி' என்பதன் பின்னும், "ஈன்றமகன்" என்பதற்கு முன்னும் நிற்பதுவே அமைவுடைத்தாம். அத்தகைய குறை நிரப்பும் சொல் பெய்து பாடங் கொள்ளின் இப்பதிகத் தொடர் தெளிவுபெற்றுச் சிறப்பதாகும். ஆகையினுலே இவ்விடத்து "சேரலாதற்கு, சோழன் மணக்கிள்ளி தேவி என்ற மகன்" என்பது போன்றதொரு பாடம் கொள்வது அவசியமும் அழகுமாகும். இனையதொரு சொல் நிரப்பப் பெருதவரை இத்தொடருக்கு எப்பொருளும் தெளிதற்கு இல்லை. பெய்து அமைத்தால் அது பொருந்தும் பொருள் தந்து சிறந்து நிற்கும். எனவே, இப்பதிகத்தொடரால், செங்குட்டுவன் சோழனுக்குத் தநயனும் சேரலாதற்கு மருகனும் ஆவன் எனத் தெளியலாகும்.

(vi) மகட்சொல்லின் பொருள் விளக்கம்

(1) இந்தப் பகுதியை முடிக்குமுன்னே இங்கு நாம் கருத வேண்டிய பிறிதொரு செய்தி உண்டு.

செங்குட்டுவனுக்குச் சேரத்தந்தையும் சோழத் தாயும் தருபவர் தமது கொள்கைக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டும் மேற்கோள் வாக்கியம் ஒன்று உண்டு. சிலப்பதிகாரப் பாயிர உரையில், "சேர லாதற்கு...சோழன் தன் மகள் நற்சோணை ஈன்ற மக்கள் இருவருள் முன்னோன்" எனச் செங்குட்டு வனை அடியார்க்கு நல்லார் குறிக்கின்றார். இதில் குறிக்கும் செய்திக்கு அவ் உரையாசிரியர் கண்ட ஆதரவை அவர் விளக்கினரில்லை; என்றாலும், அவர் உரையின் இத்தொடரை ஆதாரமாக்கிச் சேர லாதற்குச் செங்குட்டுவன் தநயன் எனவும், அவன் தாய் சோழன் மகள் எனவும் சிலர் கருதுகின்றனர். இவர் கொள்கைக்கு ஆதாரமாய்க் காட்டக்கூடிய இதனினும் சிறந்த ஒரு சொற்றொடரும் நான் காணு கின்றேன். இளங்கோவடிகளே, தம் நாடகக் காப்பியத்தில் "திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகளீன்ற மைந்தன்.......செங்குட்டுவன்"* என்று கூறுகின்றார். அடிகளைவிட அவர் குலமுறையைத் தெளிவிக்கப் பிறர் யாரும் அருகர் இல்லை. அவர் வாக்கியத்தை எடுத்து எறிய அதிகாரம் எவர்க்கும் இல்லை. ஆகவே இவ்வாக்கியத்தால் அவருக்கும் அவர் தமையன் செங்குட்டுவனுக்கும் தாய் ஆவாள் சோழன் தநயை என்றே ஏற்படுமாதலால், இதை ஒப் புக்கொண்டு பதிற்றுப்பத்து பதிகப் பாக்களின் ஆதரவைக் கூடப் புறக்கணிக்க வேண்டிவரும். ஏனெனில், அப்பதிகப் பாவலர் சேரர் குலத்துக்கு அந்நியர். அடிகளோ, அக்குடியில் பிறந்து சிறந்த

* வாழ்த்துக்காதை, உரைப்பாட்டுமடை: வரி 2, 3

பெருந்தகையார் ஆவதோடு, செங்குட்டுவனுக்கு உடன் பிறந்த தம்பியுமாவர். அதனால் இது சம்பந்தமாக அவர் கூற்றே ஏற்ற பெற்றியதாகும். இவருடைய இவ்வாக்கியமே அடியார்க்கு நல்லார் உரைத் தொடருக்கும் ஆதரவாய் இருக்கலாம் எனவும் தோன்றுகிறது. ஆதலால் இத்தொடர்களின் பொருளை ஊன்றி ஆராயவேண்டுவது மிகவும் அவசியமேயாம்.

(2) அடிகளின் மூல வாக்கியத்திலும் அடியார்க்கு நல்லாரின் உரைத்தொடரிலும் வருகின்ற 'மகள்' எனும் சொல் தநயைப் பொருளிலேயே நிற்குமாயின், இதுவரை நாம் செய்த ஆராய்ச்சி எல்லாம் விழல் நீராகும். அதற்கு அஞ்சி அச்சொல்லுக்கு அப்பொருளே அமையுமாயின் அதைக் கொள்ளப் பின்னிடையும் பெற்றியில்லை. பதிற்றுப் பத்துப் பதிகத் தொடர்கள் ஈண்டு மகட் சொல்லைத் தநயை எனக் கொள்ளற்கு இடம் தருமாயின், சங்கையின்றிச் சேரருக்கு மக்கள்- தாயமே உள்ளது எனக் கொள்ளக் கூடும். பதிகங்களோ, மருமக்கள்- தாயத்தையே சுட்டுகின்றன. 7-ஆம் பதிகத் தொடர் அறவே மக்கள்- தாயத்தை மறுத்து மற்றதனையே வலியுறுத்துகின்றது. இவற்றை எல்லாம் மேலே விசாரித்தோம். பதிகம் பாடிய பழம் புலவர் பிழைத்தனர் என்று அவர் பாக்களை எளிதில் கழித்தற்கு இல்லை. என்றாலும், இளங்கோவடிகளின் சொற்றொடர் மக்கள்-தாயத்தை மட்டுமே சுட்டுமாயின், அவரையே தழுவிப் பதிகப்பாவலரை நழுவவிட வேண்டிவரும். ஆனால், அப்படி நழுவவிடு

முன் அவர் பதிகத் தொடரும்' இளங்கோவடிகள் சொற்றொடரும் தம்முள் மாறுபடாமல் நின்று அமையும் பொருள் அமைதி பெறக்கூடுமா என்று விசாரிப்பது நமது முதற் கடமை. "பெரும் புலவர் சொல்லாற்றல் மெய்ம்மை பிறழாமல் காக்கும்" என்னும் மரபுண்மையை மறவாமல் முதலில் இவற்றை அமைத்துக் கொள்ளும் முயற்சியை நாம் மேற்கொள்வதே முறையாகும். எவ்வாற்றானும் அமைதி பெற வழி காணுதவரை இவற்றுள் சிறந்தது கொண்டு பிறவற்றைக் கழிப்பது இழுக்கு ஆகாது. இம்முறையை இங்கு நாம் மேற்கொண்டு அடிகளுடையவும், அவற்றைப்பற்றி எழும் அடியார்க்கு நல்லார் உடையவுமான சொற்றொடர்களைச் சிறிது ஊன்றி ஆராயப் புகுவோம்.

(3) இந் நெருக்கடியில், இவ்வாராய்ச்சிக்கு உதவியாக எதிர் பாராத இடத்திலிருந்து நமது ஐய இருள் அகற்றவரும் விளக்கத்தைப் பெறுகின்றோம். சங்கப் புலவரான சாத்தனார், செங்குட்டுவன்—இளங்கோவடிகள் இருவருக்கும் சமகாலத்தவர்; அதுமட்டும் அன்று. அவ்விருவர் பழக்கமும் நட்பும் பெற்றவராவர். மா பத்தினியின் மறக் கற்பால் மதுரை அழலுண்டு அழிந்த பிறகு இவர் சேரநாடு சென்று வஞ்சியில் கோச் சேரன் வண்மையையும் இளங்கோவின் மதிப்பும் பெற்று வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் இவர் மணிமேகலை நூலை இளங்கோவுக்குப் பாடிக் காட்டியும், அடிகளின் சிலப்பதிகாரத்தை அவர் பாடக் கேட்டும், ஒருவர் நூலை ஒருவர் பாராட்டியதாகத் தெரிகின்றோம். அடி

களின் அங்கீகாரச் சிறப்புடைய மணிமேகலையுள் "மகள்" எனும் சொல் "மனைவி" எனும் பொருளில் வழங்கப் பார்க்கிறோம்.

> "நினக்கிவன் மகனாத் தோன்றிய தூஉம்
> மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம்
> பண்டும் பண்டும் பலபிறப் புளவால்"
> (மணிமேகலை, காதை-21. வரி 29-31)

எனும் அடிகளில் சாத்தனார், மணிமேகலையும் உதயகுமரனும் பல முற் பிறப்புக்களில் சதி பதிகளாக வாழ்ந்த விவரத்தை விளக்குகின்றார். இவ்வடிகளில் 'மகள்' என்பது மனைவியையே சுட்டி நிற்பது வெளிப்படை. மஹாமஹோபாத்தியாய சாமிநாதையர் அவர்களும் இவ்வடிகளுக்குத் தாம் எழுதிய குறிப்புரையில் 'மகள்' என்பதற்கு 'மனைவி' என்றே பொருள் வரைந்துள்ளார்கள். இதனால், மகள் சொல்லுக்கு மனைவிப் பொருள் வழக்குஉண்டு என்பது தெளியப்படுகிறது. இன்னும் "கணவன்—மனைவி" எனும் பொருளில் "மகன்"—"மகள்" என்ற சொற்கள் வரும் என்பதை 'நோதக வுண்டோ நும் மகனார்க்கினி' * என இளங்கோவும் கூறுதலாலும், செய்யுளிலும், வழக்கிலும், 'மணமகன்'—'மணமகள்'—என்ற பிரயோகங்கள் அடிப்பட்ட ஆட்சி பெறுதலாலும், நன்கு அறியலாம். ஆகவே, 'மகள்' எனும் சொல் 'மனைவி' எனும் பொருளில் வருவது அருமையில்லை; ஆன்ற சான்றோர் ஆட்சியும் தமிழ் நன் மக்களிடை நெடுவழக்கும் உடைய தென்றே தெரிகின்றது.

---

* சிலப்பதிகாரம்—கொலைக்களக் காதை—வரி 17.

(4) இப்பொருளில் அடிகள் வாக்கும், அடியார்க்கு நல்லார் உரைத் தொடரும், பதிற்றுப் பத்துப் பாக்களோடு எவ்விதப் பிணக்கும் இன்றிப் பொருந்தி அமைகின்றன, "சோழன் மகள்" என்பதற்குச் "சோழன் மனைவி" என்று பொருள் கொண்டால், சோழனுக்கு அவன் தேவி ஈன்ற மக்கள் சேரனுக்குத் தநயர் ஆகார், மருகரே ஆவர் என்பது விசதமாகும். எனவே, "சேரலாதற்குச் சோழன் மகள் ஈன்ற மகன் செங்குட்டுவன்" என்ற பிரயோகத்தை மட்டும் வைத்துச் சேரலாதற்குச் செங்குட்டுவனை நேரே தநயனாகவும், சோழனுக்கு அவனை மகள் பிள்ளை பேரனாகவும் கொண்டு தீர வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எனவே, சிலப்பதிகாரத்தில் வரும் இம்மகள் சொற் பிரயோகம் பதிற்றுப்பத்துப் பதிகக் குறிப்புக்களோடு முரணுவதாகக் கொள்ளவேண்டா. இப்பதிகத் தொடர்கள் சேரர் குடியில் ஒரு தலையாக மருகர் அல்லது வழித் தோன்றல்களையே சுட்டுவனவாகவும், அப்பதிகத் தலைவர் சேர மன்னருக்குத் தநயர் ஆகார் மருகரே ஆவார் என விளக்குவனவாகவும் தாமே தெளியத் தெரிக்கின்றன. சிலப்பதிகாரப் பிரயோகங்களும் இத்தகைய முறையைத் தழுவி அமைவனவாகக் காண்கின்றோம்.

(vii) மற்றும் ஓர் ஐயம் அகற்றல்

இனி, 'நுந்தை தாணிழ லிருந்தோய் நின்னை' என்று வரம் தருகாதையில் இளங்கோவும், 'நிமித்திகன்.......சேர்தி நீ எனச் சேரலற்கு உரைத்தவன்

மைந்தரை நோக்கி, நந்தாச் செங்கோல் அந்தமில் இன்பத்து அரசாளுரிமை இளையோர்க்கு உண்டு என' என்று பதிக உரையில் அடியார்க்கு நல்லாரும், இமையவரம்பனையும், செங்குட்டுவன் இளங்கோ என்பாரையும் முறையே 'நுந்தை' 'மைந்தர்' எனச் சுட்டிக் கூறியதைக் கொண்டு, இவர்கள் அவனுக்குப் புதல்வரே ஆகவேண்டும் எனச் சிலர் வாதிக்கலாம். ஆனால் இவ்வாராய்ச்சி யில் எவ்வித முடிபையும் இச்சொற்களைக் கொண்டு துணிதற்கு இல்லை. தந்தை, நுந்தை, எந்தை என்பன முன்னோன், உன் தலைவன், என் இறைவன் என்ற பொதுப் பொருளில் மேம்பாட்டுச் சொற் களாயும் 'மைந்தர்' என்பது ஆண்மக்கள் ஆண்சிறார் என்று குறிக்கும் ஒரு பாராட்டுப் பொதுச் சொல்லா யும், சான்றோர் பாட்டுக்களில் பெருவழக்காய் வரு கின்றன. இவை 'பிதா' 'புதல்வர்' என்ற முறையை மட்டும் யாண்டும் சுட்டி நிற்கும் நியதியுடையன வல்ல. 'எந்தை வாழி ஆதனுங்க' என்று வேங் கடத்து வேள் ஒருவனைப் புலவர் ஆத்திரையனாரும், 'அஃதை தந்தை அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்' எனப் பிறரும் பாடியதும், இனைய பல பிறவும்கொண்டு நுந்தைச் சொல்,—உன் இறைவன் —உன் முன்னவன் என்ற பொருளில் அமையும் எனத் தெளிகின்றோம். 'மாந்தர் மைந்தர் மக்க ளாண் பொதுப் பெயர்' எனும் திவாகரச் சூத் திரத்தால், மைந்தர் ஆண் மக்களின் பொதுப் பெயர் என்று அறிகின்றோம். ஆகவே, 'நுந்தை' 'மைந்தர்' என்ற சொற்களை வைத்துச் செங்குட்டு வனும், அவன் தம்பி இளங்கோவும், நெடுஞ்சேர

லாதற்கு நேரே பெற்ற புதல்வராவர் என வரை யறுத்து முறைகொள்ள இயலாது. மருமான்மார் ஆய மைந்தருக்கு அவர் தம் குல முதல்வனை அம் மான்கோவை 'நுந்தை' என்று சுட்டுவது தவ ருகாது, தகவுடையதேயாகும். பிதா—புதல்வர் என்று தெளிவாக விதந்து சுட்டும் வேறு பிரயோ கம் ஒன்றும் சேரரைப் பற்றிய பழம் பாட்டுக்களில் யாண்டும் இன்மையால் ஈண்டும் அம்முறையை இச் சொற்களால் மட்டும் அமைத்துக்கோடற்கு அவசிய மில்லை. ஆகவே, இதுவரை செய்த இவ்வாராய்ச்சி யால் சேரரை மக்கள்-தாயம் உடையவராகத் தெளி விக்கும் சான்றுகள் எதுவும் கிடையாமையோடு அவர் மரபினர் மருமக்கள்-தாயத்தினரே ஆவர் என்று ஒருவாறு துணியப் போதிய ஆதாரமும் கண்டோமாவோம்.

4. பிற சான்றுகள்

இதுவரையில் பதிகத் தொடர்களின் சொல் அமைப்பையும், ஆற்றலையும் கொண்டு அவற்றைத் தனித் தனியே ஆய்ந்து வந்தோம். இனி, இவ்வாராய்ச்சிக்குப் பொது நின்றுதவும் சில செய்திகளையும் துணைக் கொள்கைகள் சிலவற்றையும் இங்கு விசாரிப்போம்.

துணைச் சான்ருய்ச் சேரர் தாய் வழித் தாய முறை துலக்கும் செய்திகளாவன:—

(i) பதிகம் குறிக்கும் சேரர் தாய்மார் பாட்டுக்களில் சுட்டப்பெருமை

(1) பதிற்றுப் பத்துப் பாட்டுக்களில் சேரலாதன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்,செங்குட்டுவன், செல்வக் கடுங்கோ வாழியாதன், இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை என்ற பாட்டுடைச் சேர வேந்தர் பலர் பெயர்கள் குறிக்கப் படுகின்றன. 'நன்னுதல் கணவ', 'நல்லோள்கணவ', 'புரையோள் கணவ', 'ஒண்டொடி கணவ', நின் பேரியல் அரிவை, 'நின் கற்பின் மாணிழையரிவை', 'வாணுதலரிவையொடு காண்வர' என்று அவர் பலரை அவரவர் மனைவிமார் கற்புறு காதல் சிறப்பால் சுட்டியும் அவரைப் பாடிய புலவர் பாராட்டிச் செல்கின்றனர். எனினும், பதிகத்தில் குறிக்கப் பெற்ற வெளியன் வேண்மாள் - நல்லினி, பதுமன் தேவி, சோழன்

மகள் நற்சோணை, வேண்மாள் - அந்துவஞ் செள்ளை முதலிய பெண்டிர் யாரும் யாண்டும் எச்சேரருக்கும் மனைவியாகச் சுட்டப் பெறாமை ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. இப் பெண்மணிகள் கோச் சேரருக்கு உரிய பெருந் தேவிமார் ஆயின், அச்சேரரைப்பாடும் புலவர் அவர் பெண்டிரைச் சுட்டிப் பாராட்டும் பல இடங்களில் யாண்டேனும் இப் பெரு மாட்டிகளுள், யார் பேரையாவது ஒரு புலவரேனும் சுட்டாமல், எல்லோரையுமே எல்லாப் புலவருமே மறந்துவிட்டு, பிற் குறிப்பாகப் பதிகப் பாட்டுகளில்மட்டும் இவரை விதந்து கூறுவானேன்? உண்மையில் இப்பெண்மைப் பெருந்தகையார் கோமன்னர் மனைவிமாராயின், பாட்டுடைத் தலைவரின் பெண்டிரைச் சுட்டி, 'இன்னவள்கணவ' என்று விதந்து பாராட்டும் இடங்களிலேனும், பாடும் புலவர் இவர்களை விசதமாகச்சுட்டாமல் விட்டிரார் அன்றோ? இப்பெண்டிர் யாரும்மூலப் பாட்டுக்களில் யாண்டும் கோச்சேரர் யாருக்கும் மனைவியராகக் குறிக்கப்படாமையாலேயே இவரைச் சேரமன்னவருக்கு மனைவியராய்க் கருதுவது தவறு என்று தெளியலாகும். இக் கோப்பெண்டிர் சேரருக்குத் தாயாரும் சோதரிமாரும் ஆவதன்றி மனைவிமார் ஆகார் என்பதை முன் பதிகப் பாக்களின் ஆராய்ச்சியால் ஒருவாறு துணிந்து கொண்டோம். அத்துணிவை, மூலப் பாட்டுக்களில் இவர் பெயர் துலங்காமல் பாட்டுடைக் கோச்சேரரின் கற்புடை மனைவிமார் பிறரை அப்புலவர் பாராட்டிப் போவது இன்னும் அதிகம் வலியுறுத்துவதாகும்.

(2) மருமக்கள்-தாயம் உடைய சேரர் குடியில் மனைமார்க்குப் பெரும் பதவி ஒன்றும் இல்லை. அம்

மனைவியரின் வயிற்று மக்களும், சேரர் குடிதாங்கும் பெற்றி பெறார். வேந்தர்க்குத் தேவியராதல் அல்லால் மனைவியர்க்கு கோக்குடியில் வேறுவித உரிமை இல்லை. அரசியராம் பதவியொடு குடி தழைய மகப்பேறு பெற்று உதவும்பெருமை கோச்சேரர் சோதரிமார், அவர் வயிற்று மருகியர்கள், இவர்கட்கே உரியதாகும். அதனால் தான் சேரரைப் பாடும் புலவர் தம் மூலப் பாட்டுக்களில் அவர் மனைவியர் பெயர் விளக்கமுறத் துலக்காமல் பாடிப்போவார். கோவேந்தர் தாய்மாரைச் சுட்டுங்கால், அத்தாயர் கோக்குடியில் பெண்வழியில் அரசியராய்ப் பதவியுள்ளார் ஆதலாலே பதிகப் பாட்டுக்களில் அவர் பெயர்கள் உறவு முறை பதவியொடு பெருமை எல்லாம் விளக்க முறப் பேசப் பெறுகின்றன.

(3) மருமக்கள்-தாயம் உடைய பெருங்குடிப் பெண்டிர் ஒத்த தகவுடைய பிறிது குடிப் பெரியாரை மணந்து வாழ்வர். அப் பெண்டிர் பெறும் மக்கள் தாய்க்குடியில் மாமன்மார்க்குப் பிறங்கடைகளாகி* நிற்பர். தம் தந்தையர் குடியில் அவர்க்குத் தொடர்புரிமை யாதும் இல்லை. கோச்சேரர் குடிப்பெண்டிர் பெரும்பாலும் அக்கோக் குடியில் மகள் கொள்ளற்குரிய தகவுடைய குறு மன்னரான வேண்மாரை மணப்பர்; சிறுபான்மை பிற குலத்து முடி மன்னர் தமையும் அவர் வேட்டல்கூடும். இவர் யாரை மணந்தாலும், இப் பெண்கள் பெறும் ஆண் மக்கள் எல்லாரும் சேரருக்கு மருகராய்ச் சேர நாட்டில் வழிமுறையே அரசுரிமைக்கு அருகர் ஆவர்.

*பிறங்கடைகள்—வாரிசுகள்.

(4) மாதுலச் சேரரோடு மருகச் சேரரைமட்டும் சுட்டி, அவர் தந்தையரைத் துலக்காவிட்டால், அவர் தாயரை மணந்த கணவர் இல்லாத மகளிராகக் கருத நேருமாகையால், அவ் இழிதகவை அறவிலக்கி, "மக்கள்-தாயம் உடைய தமிழகம் மதிக்க மணந்து சிறந்த கற்புடைத் தாய்க்குடிப் பெருமை உடையர் பாட்டுடைத் தலைவர்" என விளக்கும் பெற்றி வேண்டப்படுகிறது. அதனாலே, அக்கோச் சேரர் குலம் விளக்கும் பதிகங்கள் ஒவ்வொன்றும் ஒவ் வொரு கோச்சேரன் தாயையும், அவன் தந்தை யோடு விளக்கி, அவ்விருவர் பெற்ற மகன் இனையன் எனத் துலக்கி, இன்ன பெருங்கோச்சேரற்கு இவன் மருமான் எனக் குறித்து, விவரம் எல்லாம் விளக்க முற விரிக்கின்றது. ஒவ்வொரு பதிகமும் பாட் டுடைத் தலைவனின் இருமுதுகுரவரையும் விதந்து கூறி, அதன்பின் அவனை அவர் ஈன்ற மகன் என ஒருபடியே தெரிநிலை முறையில் குறித்துப் போகின் றது. அன்றியும், அவன் முன் தோன்றலான கோச் சேரனை முதலில் கூறி, பின் பெற்றோர் பெயர் கூறி, அச்சேரனுக்கு அப்பெற்றோர் ஈன்று உதவிய மகன் எனப் பதிகம் தோறும் தவறாமல் கூறிப்போவதால், அப்பாட்டுடைத் தலைவன் கோச்சேரனுக்கு வழித் தோன்றலான மருகன் என்பதும் குறிப்பு வகை யால் துலக்கப்படுகிறது.

(ii) பதிற்றுப்பத்துச் சேரரின் ஆட்சி முறை

இனி இப்பதிகங்கள் கூறும் அரசர் வரிசையைச் சிறிது ஆராய்வோம். சேர சிம்மாதனத்தில் உதியஞ்

சேரலுக்குப் பின் இமையவரம்பனும் அவனுக்குப் பிறகு அவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் முறையே ஏறினர் எனவும், இவருள் இளையோனுகிய குட்டுவனும் ஆண்டு முடிந்தபின்னரே இவர் இருவருக்கும் தொடர்புடைய பதுமன்தேவி மக்கள் இருவரான நார்முடிச் சேரலும், ஆடு கோட்பாட்டுச் சேரலாதனும், அவர்களுக்கு இடையே சோழன் மணக்கிள்ளி தேவிமகன் செங்குட்டுவனும் முறையே அரசு கட்டிலேறி நாடு ஆண்டனர் எனவும் தெரிகிறது. மற்ருெரு கிளைச்சேரர் வழி முறையில் அந்துவன் சேரல் முதல் இளஞ்சேர லிரும்பொறை ஈருக நான்கு அரசர் வரன்முறையாய் ஆட்சிபுரிந்தனர் எனவும் விளங்குகிறது. இவற்றைக் கொண்டு இமையவரம்பனுக்குப் பதுமன் மகளும் சோழன் மகளும் மனைவியராய் மக்கள் மூவரைப் பெற்றுக் கொடுத்தனர் எனவும், அம்மக்கள் தம் தந்தை சிறிய தந்தை இருவரும் ஆண்ட பிறகு முறையே தாம் முடிபுனைந்து தனித்தனியே எல்லாரும் சேர நாட்டை ஆண்டனர் எனவும், அதுவே போல அந்துவஞ் சேரலுக்குக் கடுங்கோவும் அவனுக்குப் பெருஞ்சேரலிரும்பொறையும் அவனுக்கு இளஞ் சேர லிரும்பொறையும் வழிமுறையே மகன் மகனுய்க் கிளைச்சேரர் சிறுநாட்டை ஆண்டுவந்தனர் எனவும் ஒரு சிலர் கருதுகின்றனர்.

ஆனல் ஆழ்ந்து சூழ்ந்து நோக்குங்கால் உண்மை வேருகத் தோன்றுகிறது. இமையவரம்பனும் அவன் தம்பியும் வேள்வெளியனுக்கு மக்கள். இவர்தம் மாமன் உதியஞ்சேரலுக்கு மருகராய், அவனுக்குப்

பின் சேர நாட்டு உரிமை பெற்று ஒருவர்பின் ஒருவ ராய் ஆண்டனர். அவருக்குச் சோதரி முறையின ரான அவர் கோக்குடிப்பிறந்த பெண்டிருள் ஒருத்தி வேள்பதுமனையும், மற்றொருத்தி சோழனையுமாக மணந்து மக்களைப் பெற்றனர். அம்மக்கள் தம் தாயர்குடிச் சேரமன்னருக்கு வழிமுறையில் மருக ராகையால் மாமன்மார் இருவரும் தம்தம் முறையில் ஆண்டு முடிந்த பின்னர், மருகர் உரிமையில் வரிசை முறையாய்த் தாமும் சேரசிங்காதனம் ஏறுகின் றனர். பதுமன் தேவி ஒருத்தியே—சேரர் பெருங் குடியில் இமையவரம்பனுக்குச் சகோதரியாயும்— கிளைச்சேரர் குடியில் கடுங்கோவுக்குச் சோதரி முறையுடையளாயும் நின்று தான் பெற்ற மக் களுள் ஒருவனைத் தன் குடியில் மருகன் இல்லாத கடுங்கோவுக்கு மருகனாய் அவன் கிளைக்குடி தழையக் கொடுத்து உதவியிருக்கலாம். அல்லது வேள் பதுமனுக்கு கோக்குடி நெடுஞ்சேரலாதன் சோதரி ஒருமனைவியும் கிளைச்சேரர்குடிக் கடுங்கோ வின் சோதரி ஒரு மனைவியுமாய் இருந்து அவரவர் தாய்க் குடியைத் தாங்க இவ்விரு மனைவிமாரும் பதுமனுக்கு மக்களைப் பெற்றும் இருக்கலாம். எப்படியாயினும், இம்மக்கள் இருவரையும் பதுமன் தேவி மக்கள் எனச் சுட்டுவது தவறாகாது. இவ்விரு குடியிலும் இவ்வாறு மாமன்மார்க்கு மருகர் வழித் தோன்றல்களாய் நின்று வரன்முறையே நாடு ஆண்டனர். இதுவே, இப்பதிகத் தொடர்கள்-தெரி விக்கும் செய்தி எனத் துணியக் கிடக்கின்றது. இப்பதிற்றுப்பத்துச் சேரரின் ஆட்சி முறையால் இத்துணிவை வலியுறுத்தி இதற்கு மாறான மக்கள்-

தாயக் கொள்கையை நலிவிக்கும் நியாயங்கள் சில வற்றை இங்கு நிதானிப்போம். அவை வருமாறு:—

(1) மக்கள் - தாயம் உடைய கோக்குடியில் மயின்முறையாய் முதல் மகனின் முதல் மகனே வழி முறையே அரசு பெறற்கு உரிமை பூண்பான். கோல் ஓச்சும் கோவேந்தற்கு ஆண்மக்கள் பிறந்திருக்க, அவரை விலக்கி வேந்தனுடன் பிறந்தவர்கள் நாடா ளும் உரிமைகொள்ளார். மருமக்கள் - தாயக்குடியா மேல் உடன்பிறந்தார் அனைவருமே வரிசை முறை யில் ஆண்டு முடிந்த பிறகுதான் அடுத்த கீழ்ப்படி யில் சோதரிமார் மக்கள்—அநந்தரவர் ஆகிய மரு கர்கள்—ஆட்சிபெறுவர்.

இம்முறையில் பதிற்றுப்பத்தில் பாடப் பெற் றுள்ள சேர பரம்பரையைப் பரிசோதித்துப் பார்ப் போம். சேரரை மக்கள்-தாயம் உடையராய்க் கருது பவர் எண்ணுகிறபடி. 2-ஆம் பதிகத் தலைவனை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு பதுமன் மகள் மணக்கிள்ளி மகள் எனும் இரு மனைவியரால், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல், செங் குட்டுவன், ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் என மூவர் மக்கள் உளர். இருந்தும், இவர்களை விலக்கி இவர்தம் சிறிய தந்தையான பல்யானைச் செல்கெழு குட்டுவன் முடி சூடி 25 ஆண்டு அரசு வீற்றிருக் கின்றான். அவனுக்குப் பிறகுதான் அவன் தமையன் மக்களான மூவரும் நாடாட்சி பெறுகின்றனர். இது மக்கள்-தாய அற முறையில் நிகழ ஒணாது.

ஆனால், சேரர் மருமக்கள்-தாயம் உடையராகில், பதிற்றுப்பத்தில் நாம் காணும் முறைதான் அற

முறையாகும். இமையவரம்பனுக்குப் பின் அவன் தம்பியே தாய்வழித் தாயக் கிரம உரிமையில் அரசனாகவேண்டும். அவ்விருவர்களுக்கும் பிறகே அவர்களின் மருகர்கள் வயதுக் கிரம வரிசைப்படி ஒவ்வொருவராய் முடி புனைந்து நாடாள்வர். மேலே நாம் கண்டபடி, களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் இவர்களின் தாய் சேரர் கோக்குடிப் பிறப்புடையவள்; பதுமனுக்கு மனைவி. ஆவிக்கோமன் பதுமன் எனும் வேளுக்கு வாழ்க்கைப்பட்டு, அவனால் இவள் சேரர் கோக்குடிக்கு இருமக்களை ஈன்று உதவினள். அதுவே போல் நற்சோணை என்பாளும் சேரர்குடிப் பிறந்து சோழனை மணந்து வாழ்ந்தவளாகும். அவள் ஈன்ற மக்கள் செங்குட்டுவனும் இளங்கோவும் ஆவர். இளங்கோ துறவு பூண்டு அடிகளாகவே, அத் தாய்வழியில் கோல் உரிமைக்கு உடையவன் குட்டுவன் மட்டுமேயாகி நிற்பன். இவர்கள் தாய் நற்சோணையும், வேள் பதுமனின் மனைவியும் சேரர் குடியில் மணந்து புகுந்த பிறகுடிப் பெண்டிரல்லர்; அக்குடியில் பிறந்து சிறந்த பேரரசிமார் ஆவர். அவர்கள் வயிற்றுதித்த மக்களான மூவரும் இமையவரம்பனுக்கும் அவன் தம்பி குட்டுவனுக்கும் பிறங்கடையர் ஆன மருகர் ஆவர். ஆகவே, தங்கள் மாமன்மாரான அவ்விருவரும் ஆண்டு முடிந்த பிறகு இம்மருகர் மூவரும் வழி முறையில் தம் மரபு நியதிப்படி ஆட்சி பெறுகின்றனர். இது அறமும் அடிப்பட்ட குடி வழக்குமாய்ப் பொருத்தமும் சிறப்பும் பெற்று அமைகின்றது. இவர்களுக்குமுன்

இமயவரம்பனுக்குப்பின் இவர்தம் இளைய மாமனை செல்கெழுகுட்டுவன் நாடாளுவதில் வரிசை முறைப் பிறழ்ச்சி இல்லை. இவர்தம் ஆட்சி முறையில் தாய்க் குடித் தாய முறை அறமே பேணி ஓம்பப்படுகிறது.

(2) மேலும், இம் மூவருக்கும் தாம் பெற்ற தநயர் இல்லை என்று யாண்டும் துலக்கப்படவில்லை. இவருள் செங்குட்டுவனுக்கு அவன் பெற்ற மகன் இருந்ததாக 5-ஆம் பதிகம் விதந்தும் கூறுகிறது. அவ்வாறு தநயர் உளராயின் மக்கள்-தாய முறைப் படி தந்தைக்குப் பிறகு உடனே உரிய தநயரே முடி சூடவேண்டுவதன்றி, இவ்வாறு சோதரர் மூவரும் தம்முள் வரிசை முறையில் ஒவ்வொருவராய் ஆட்சி பெறுவது அவசியமும் அறமும் இல்லை. தம் தநயரை விலக்கி இம் மூவரும் முறையே ஆண்டதும், இவர் களை விலக்கி இவர்களுக்கு முன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆண்டதும், இவர் குடியில் மருமக்கள்- தாயம் உண்மையையும், அம்முறையில் இவர்களுக்கு உள்ள தாய்வழித் தாய உரிமை யையும் நன்கு வலியுறுத்தும்,

(3) இன்னும் மக்கள் - தாய முறையில் கடைசி யில் ஆண்ட அரசனின் அடுத்த பிறங்கடைக்குத்தான் (வாரிசு) அடுத்த பட்டம். ஒரு தாய் வயிற்று மக்கள் மாற்றுந்தாய் வயிற்று மக்களைவிட நெருங்கிய தொடர்புடையர். அதனால் சிறந்த உரிமையும் அடை கின்றனர். அறநூல் விதியும் ஆட்சியும் நமது நாட்டில் ஒரு தந்தை மக்கள் பலருள், ஒருவருக்குச் சக உதரர் அல்லாரை விலக்கி, அவருடன் ஒரு வயிற்று உதித்தாரையே அவருக்குச் சிறந்த பிறங்

கடைகளாக்கி நிற்கும். எனவே, களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலுக்கு ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் சகோதரன்; செங்குட்டுவன் மாற்ருந் தாய் மகன். இவர்கள் எல்லார்க்கும் தந்தை இமைய வரம்பன் ஆயின், அவனுக்குப்பின் அவன் மக்கள் மூவருள் மூத்தவனே சிறந்த பிறப்புரிமையான் பட்டம் எய்துவன். அவனுக்குப்பின் அம் மூத்த மகனுடைய வாரிசுக்குப் பட்டம் இறங்குவது அல்லது அவ்வாரிசுகளை விலக்கி முந்திய தந்தையின் வாரிசுக்குப் போவது முறை இல்லை. செங்குட்டுவன் மூத்தவனுயிருந்தால் முதலில் அவனே முடி புனைந்திருப்பான். அவனுக்குப்பின் அவன் தநயரும் அவனுக்கு ஒரு வயிற்றுத் தம்பியருமே ஆட்சி பெறுவர். இவர்க்கு முன்னமே அவன் மாற்ருந்தாய் மக்களுக்கு உரிமை இல்லை. ஆனல், செங்குட்டுவனுக்குமுன் நார்முடிச் சேரல் ஆண்டு இருப்பதாய் அறிகின்ரும். அதனல், அவனே வயதில் மூத்தவனகப் பட்டம் எய்தினன் என்று தெரிகிறது. அவனுக்குப்பின் அவன் தநயரும் தநயர் இல்லையானல் அவனுக்கு ஒரு வயிற்றுத் தம்பியான ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுமே அவன் அரசு பெறுதற்குச் சிறப்புரிமை உடையர் ஆவர். இவர்களைவிட்டு இடையே செங்குட்டுவன் ஆட்சி பெறுதற்கு அவசியமும் நியாயமும் இல்லை.

ஆனல், மருமக்கள் - தாயக் குடியில் இவர்கள் கோச் சேரருக்கு மருகராவர். ஆகவே, வயதுக் கிரமப்படி இம்மூவரும் ஆட்சி பெற்றுத் தீர வேண்டும். மருகருள் ஒருவயிற்று உதித்ததால்

மட்டும் யாருக்கும் எவ்விதச் சிறப்புரிமையும் ஏற்படாது. வயது முறை வரிசையில் மட்டுமே அவரவர் ஆட்சி உரிமை வரையறுக்கப்படும். ஆளும் அரசருக்கு மக்கள் இருந்தாலும் அம்மக்களுக்கு உரிமை இல்லை. ஆகவே ஒருவர் பின் ஒருவராய்ச் சோதரரும் சோதரருக்குப்பின், அவர்தம் மருகருமே ஆட்சி பெறுவர். பதிற்றுப்பத்துப் பதிகங்களால் இவர் மூவரும் முறையே சேர நாட்டை ஆண்டதாயும், இவருள் ஒரு வயிற்று உடன் பிறந்தார் இருவர்க்கு இடையே ஒரு வயிற்று உதியாத செங்குட்டுவன் ஆட்சி பெற்றதாயும் அறிகின்றோம். இவையெல்லாம் மருமக்கள் - தாயத்தொடு பொருந்துவன அன்றி, மக்கள் - தாய முறைக்கு ஒவ்வா. இவற்றாலும் சேரர்குடியில் மக்கள் - தாயம் வழங்கவில்லை என்பது உறுதி பெறுகிறது.

(iii) சேர மன்னரை யாண்டும் தந்தைக்குத் தநயரென்னாது, முன்னவற்கு மருகரெனவே கூறும் மரபின் குறிக்கோள்

இதை வலியுறுத்தும் செய்தி இன்னும் ஒன்று உளது. பதிற்றுப்பத்திலும் மற்றும் பண்டைச் சங்க நூல்கள் பலவற்றிலும் சேரரைக் குறிக்கும் பாட்டுக்கள் பல. அவற்றுள் ஒன்றிலேனும் ஒரு சேரனையாவது அவன் தந்தைக்கு மகன் என்று சுட்டும் குறிப்பே கிடையாது. அதற்கு மாறாக முன் அரசரின் தொடர்பு குறிக்கும் இடத்தில் எல்லாம், பாட்டுடைச் சேரனை அம்முன்னோனின் 'மருகன்'' எனவே எல்லாப் பழம் புலவரும்

யாண்டும் ஒருபடியே சுட்டிப்போகப் பார்க்கின்றோம். இது மிகவும் சிந்திக்கத்தக்கது. "மருகன்" என்பது வழித் தோன்றல் என்ற பொருள் உடைய சொல் ஆகையாலும், அடுத்த தந்தையைச் சுட்டாமல் புகழ் சிறந்த மூதாதையரையே சுட்டித் தொடர் காட்டுவது புலவர் முறை ஆகையாலும், அம்முறையில் பாட்டுடைத் தலைவரை அம் முன்னோருக்கு மருகர் எனவே சுட்டிப் பாடுகின்றனர் எனச் சிலர் சமாதானம் காட்ட வரலாம். எனில், சேர குலத்தில் புகழ் படைத்த ஒரு சேரலற்குப் புகழ் படைத்த பெருமக்கள் ஒருவருமே எஞ்ஞான்றும் பிறக்கவில்லை என்றாவது, அடுத்துப் பெரும் புகழ் கொண்ட இருதலை முறைச் சேர வேந்தரைப் பாடப் புலவர் இல்லை என்றாவது, கொள்ளுவது அசம்பாவிதம். பதிற்றுப்பத்துப் பதிகப் பாட்டுக்களை மக்கள்-தாய முறையில் பொருள் கொள்ளுவோரே இமையவரம்பனுக்குப்பின் அவனை ஒத்துப் பாடல் பெறும் புகழ்படைத்த மூவர்மக்கள் இருந்தனர் என்றும், அந்துவன் சேரல் முதல் இளஞ்சேரலிரும் பொறை வரை நாலு தலைமுறையாக ஒவ்வொரு சேரனுக்கும் பாடப்பெறும் சிறப்புடைய பெருமகனே பிறந்து புகழ் சிறந்துளன் என்றும் கூறுகின்றனரே. இப்பெருமக்கள் பலருள் யாரேனும் ஒருவனைப் பாடிய புலவர்கூட அவனை அவன் பெருந் தந்தைக்கு மகன் எனச் சுட்டிப் பாடாததற்குக் காரணம் என்ன? ஒவ்வொரு பதிகத் தலைவனுடைய மனைவியின் தந்தையைக் கூடப் புலவர் தவறாமல் சுட்டிச் சிறப்பிப்பதாக, இப்பதிகத் தொடர்களுக்குப் பொருள் கொள்ளுகிறவர்கள்,

அச்சேரருக்கு முன் பெரும் புகழ் படைத்துப் பல புலவரால் பாடப் பெற்ற அவர் தம் தந்தையரின் தொடர்பை மட்டும் எல்லாப் புலவரும் ஒருபடியாக மறைத்து ஒதுக்குவானேன்? மக்களைப் பாடும் புலவர் எல்லாரும் அம்மக்களினும் புகழ் சிறந்த அவர் தம் தந்தையரை அற மறந்து ஒதுக்கிவிட்டு பெயர் சுட்டும் பெற்றி பெறுப் பெண்டிரையும், அப் பெண்டிர் பிதாக்களையும் தம் பாட்டுக்களில் மற வாமல் பாராட்டுவானேன்? போகட்டும். ஒரு தலை யாகப் பாடும் சேரரின் முன்னோரை மதியாமல் விட்டொழித்து, அச்சேரற் காதற் பெண்டிரோடு அப்பெண்டிர் தந்தையரை மட்டுமே பழம் புலவர் எல்லாரும் பாராட்டினர் என்றுவது கொள்ளக் கிடந்தாலும் ஒருவாறு அமைதி பெறலாம். உண்மை யில் புலவர் பலரும் தம் பாட்டுடைத் தலைவரின் முன்னோரை விட்டபாடில்லை. அன்ன பெரு முன் னோரைச் சுட்டி, அவர் மருகர் எனப் பாட்டுடைத் தலைவர் தமை விதந்து பாராட்டிப் போக நாம் பார்க் கின்றோம். பதிற்றுப்பத்திலேயே அத்தகைய குறிப்புக்கள் பல வருகின்றன. இதனை ஊன்றிச் சிந்திக்கும் போது மக்கள்-தாய முறை இக்கோச் சேரர் குடியில் இல்லாமையே இவ்வாறு சேரர் எல்லாம் மருகர் எனவே பாடப் பெறுதற்குக் காரணம் என்று தெரிகிறது. இளஞ்சேரலிரும் பொறையைப் பெருஞ் சேரலிரும் பொறையின் மகன் என்னது, 'விறல் மாந்தரன் விறன் மருகன்' என்று பெருங்குன்றூர் கிழார் பாடத்தக்க காரணம் இம் மருமக்கள்-தாயம் அன்றிப் பிறிது காணல் அரிது.

5. மருகன் என்ற சொல்லின் பொருளாட்சிகள்

ஊன்றிச் சிந்தித்தால் 'மருகன்' என்னும் சொல்லுக்குச் "வழித் தோன்றல்" என்னும் பொருளே இம் மருமக்கள் - தாய வழக்கால் வந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. மருகன் எனும் சொல், நேரே சோதரி மகனையும், மகள் மணவாளனையுமே குறிப்பது மரபு. அந் நேர்பொருளில் வழங்குவதோடு அமையாமல், அச்சொல் சில புலவர் செய்யுள்களில் மக்கள்-தாயக்குடிகளில் வழித்தோன்றல் ஆவாரைச் சுட்டவும் வருகிறது. மக்கள்-தாய நாடுகளில் மருகர் மாமன்மார்க்கு என்றும், வழித் தோன்றல் ஆகமாட்டார். மருமான்மார்க்குரிய பெயர்ச்சொல் அவ்வுறவு முறைக்கு உரிமை இன்றித் தம் தந்தைக்குத் தநயராய் வழித் தோன்றல் ஆவாரைக் குறிக்கப் பெறுவானேன்? மக்கள்-தாய முறையில் அச்சொல் அப்பொருளில் ஆட்சி பெறும் ஆற்றலும் ஆறும் இல்லை. மருமக்கள்-தாய வழக்கம் தமிழகத்தில் உளதாயின் அம்முறையில் வழித் தோன்றலாவார் மருகரே ஆகையால், நாளடைவில் "மருகன்" எனும் சொல், மருமான்—எனும் முறை சுட்டும், தன் நேர் பொருளை மட்டுமன்றி வழித் தோன்றல் எனும் சார்புப் பொருளையும் வழக்காற்றால் பெறுவது இயல்பாகும். பிறகு இரு தாயக் குடிகளிலும் தாய முறையைக் குறியாமலே பிறங்கடை (வாரிசு) ஆவார் எவரையும் வழித்தோன்றல்

எனச் சுட்டும் பொதுச்சொல்லாகி வழங்கப்பெறும். இதுவே இச்சொல்லுக்கு இப்பொருள் கிடைத்த வரலாருகவேண்டும். என்றும் யாண்டும் மருமக்கள்-தாயம் அறியாத மக்கள்-தாயம் மட்டுமே வழங்கும் ஒரு நாட்டில் மருகர் என்றுமே வழித் தோன்றல் ஆகார் ஆகையால், அவர் பெயர் அப்பொருள் எய்த நியதியில்லை; வழியும் இல்லை. ஆகவே, தமிழில் இப் பொருளில் இச்சொல் வழங்கிவருவதாலும், தமிழகத்தில் சேர நாடல்லாத பிறிது புலமெல்லாம் மக்கள்-தாயமே தொன்று தொட்டு நினைவு எட்டும் நூல் குறிக்கும் காலமெல்லாம் கையாளப் பெறுவதாலும், இச் சொல்லுக்கு இப் பொருளாட்சி குடபுலச்சேரர் குடித் தாய முறைகொண்டே கிடைத்திருக்க வேண்டும் என்பது தெளிவு பெறுகிறது. எனவே, பழம் பாட்டுக்களில் சேரரை எல்லாம் மருகர் எனவே குறித்துப் போகும் வழக்காற்ருல் அச்சொல்லின் பிந்திய பொருள் கொண்டு அவரை மக்கள்-தாய முறையில் வழித் தோன்றல்கள் எனக் கொள்ளுவதைவிட, அவர்களின் மருமக்கள்-தாய முறையையே அது சுட்டும் எனவும், அவர் தம் தாய முறை வழக்குப் பற்றியே நாளடைவில் அச்சொல் வழித் தோன்றல் எனும் பொதுப் பொருள் பெற்று மக்கள்-தாய முறையில் வழித் தோன்றல் ஆவாரையும் குறிக்கலாயிற்று எனவும் கொள்ளுவதே பொருத்தமாகும்.

6. பதிற்றுப்பத்துப் பாட்டுக்களிலெல்லாம் மருகரென்றே சுட்டவும் பதிகங்களில் மட்டும் 'மகன்' என்று வந்த பிரயோ கத்தின் பொருட் பொருத்தம்

இனி, இங்கு நாம் பொதுவாக விசாரித்து அறிய வேண்டிய செய்தி பிறிதொன்று உண்டு. பதிற்றுப்பத்துப் பதிக ஆசிரியர் பாட்டுடைத் தலைவனைப் பதிகத்தில் குறித்த வேறு சேரவேந்தனுக்கு மேலே கூறியபடி 'மருகன்' என்னுமல் வாளா மகன் என்றே கூறி வைத்திருக்கின்றார். ஆகவே இங்கு 'மகன்' எனும் சொற்பொருளை நாம் சிறிது விசாரிப்பது பொருத்தமாகும். பதிற்றுப் பத்து நூலிலும் மற்றச் சங்கச் செய்யுள்களிலும் நிரந்தரமாகப் புலவர் எல்லாம் தாம் பாடும் சேரரை அவர் தம் முன்னோருக்கு மருகர் என்றே குறித்துப் போவதற்கு மாறாக, இப்பதிகப் பாட்டுக்களில் எல்லாம் ஒருபடியாக ஒவ்வொரு பாட்டுடைச் சேரனையும் மற்றொரு பெயர் குறித்த சேரமன்னனுக்கு 'மருகன்' என்னாது வாளா 'மகன்' எனவே கூறிவைத்திருப்பது சிந்திக்கத்தக்கது. ஒரு சேரனுக்கு மற்றொருவன் மகன் என்று மட்டும் கூறப்பட்டாலும் கூட, அது கொண்டு பின்னவன் முன்னவனுக்கு அவன் பெற்ற புதல்வன் என்று ஒருதலையாகத் துணிய இயலாது. அப்படியிருக்க, இங்குப் பதிகங்களெல்லாம் வாளா இரு சேரரை மட்டும்

சுட்டி அவருள் ஒருவனை மற்றவனுக்கு மகன் எனப் பேசவும் இல்லை. ஒவ்வொரு பதிகத்திலும் 'மகன்' எனும் சொல் தனியே இருசேரர் பெயர்க்கிடையில் முறைப் பெயராய் நில்லாமல் இடையே பிற சொற்றொடர் ஆக்கம் பெற்றே வருகின்றது. ஆகவே, இங்கு இதன் பொருளைச் சிறிது ஊன்றிவிசாரிப்பது அவசியமாகிறது.

'மகன்' என்ற சொல் தமிழில் (1) ஆடவன், (2) மணவாளன் (3) பெற்ற புதல்வன் (4) பெருத வழித் தோன்றல் அல்லது வாரிசு எனப் பல பொருளிலும் வருவதாகும். ஆகவே இச் சொல்லுக்கு ஆங்காங்கே இடம் நோக்கிப் பொருள் இன்னதென்று வகுத்துக் கொள்ள வேண்டுவது இன்றியமையாத கடமையாகும். பதிகங்களில் எல்லாம் இச்சொல் எங்கும் நிரக்க 'ஈன்ற' என்னும் அடை அடுத்தே நிற்பதால் இதற்குக் கேவலம் 'ஆடவன்' அல்லது 'மணமகன்' என்ற பொருள்கள் விலக்கப்படும். பெற்றோர் பெயர் குறித்து இன்னார் "மனைவி ஈன்ற மகன்" என்று விதந்து கூறப்படுவதால் அப்பெற்றோருக்குப் பாட்டுடைத் தலைவன் அவர் 'பெற்ற புதல்வனே' என்று தெளியப்படும்.

அதனாலேயே பதிக முதலில் பெயர் குறிக்கப் பெற்ற 'சேரனுக்கு அவன் புதல்வன் ஆகான்' என்பதும் தெளியப்படும். எனினும், அச்சேரனுக்கும் பாட்டுடைத் தலைவனுக்கும் உள்ள தொடர்பைக் குறிக்கும் வேறு முறைச் சொற்கள் எதுவும் அங்கு இல்லாததால் அத்தொடர்பையும் இம்மகற்சொல்லே குறிப்பதாகக் கொள்ள வேண்டும். கொண்டால்,

அக்குறிப்பில் இச்சொல்லுக்குப் பெற்ற புதல்வன் அல்லாத வழித்தோன்றல் என்ற பொருளே அமைவதாகும். ஏனெனில், இங்கு ஒவ்வொரு பதிகத் தலைவனையும், புலவர் பதிகப்பாட்டில் அவனைப் பெற்றோர் இருவரொடும் விதந்து சுட்டி, அவன் அவருள் இன்னான் தேவி ஈன்ற மகன் என விளக்குவதோடு, பதிக முதலில் பெயர் குறித்த மற்றொரு சேரனுக்கும் அவன் "வழிமுறை மகனாவான்" என்றும் தெளிவிக்கின்றார் என்பது விசதமாகிறது. ஆகவே, இங்குப் பதிகங்களில் வரும் 'மகன்' எனும் சொல் — "பதிகத் தலைவனைப்" பெற்றோரின் தொடர்பு குறிக்கும்போது அவருக்கு அவன் புதல்வன் முறைப் பொருளிலும், மற்றொரு சேரமன்னன் தொடர்பு குறிக்கும்போது 'வழித்தோன்றல்' என்ற தகவுப் பொருளிலும்—ஆட்சி பெறுகின்றது என்று தெளிவாகிறது.

இதைத் தெளிவிப்பதற்காகவே ஆசிரியர், பாட்டுடைச் சேரனைப் பெற்ற இருமுதுகுரவரைக் குறிக்கும் சொற்றொடரை அவனைச் சுட்டும் 'மகன்' என்ற சொல்லுக்கு அண்மையில் வைத்ததோடு அமையாமல், அடுத்து அச்சொல்லுடன் 'ஈன்ற' என்ற அடை தொடுத்து நிறுத்தியும்—அவனைத் தனக்குப் புதல்வனாகாமல் வழித் தோன்றலாகமட்டும் பெறும் மற்றொரு சேரமன்னன் பெயரைக் குவ்வுருபு கொடுத்துப் பிரித்துச் சேய்மையில் நிறுத்தியும்—வைத்திருக்கும் அழகு கவனித்துப் பாராட்டத் தக்கது. இங்கு நான்காம் உருபு 'கொடை,' 'பொருட்டு,' 'முறை'ப் பொருள்களில் வந்துள்ளது.

பதிக முதலில் குறித்த ஒரு சேரனுக்கு. அவன் மரபு தழையும் பொருட்டு அவன் குடிசிறக்க மகப்பெற்று ஈயும் உரிமையுடைய கோமாள் ஒருத்தி விதந்து கூறப்பட்ட வேறொரு தக்க கணவனை மணந்து அவன் மனைவியாவாள், தனக்கு மகனைத் தான் பிறந்த சேரர் குடி தழைய அச்சேரனுக்கு முறைக்கு மகனை (வாரிசாய்) ஈன்று கொடுத்தவனே பாட்டுடைச் சேரன் என்பது பதிகத் தொடர் அமைப்பால் இனிதுபோதருகின்றது. பதிக முதலில் குறிக்கும் சேரன் பெயர்க்கு நான்காம் வேற்றுமை உருபு புணர்த்திப் பிரித்து அதைச் செய்மையில் நிறுத்தியதனுல் அப்பெயர் உடையானுக்குப் பின் "ஈன்ற மகன்" என்று வரும் தொடர் குறிக்கும் பாட்டுடைத் தலைவன் நேரே பெற்ற மகனுகாவிட்டாலும் அச்சேரன்குடி சிறக்கும் பொருட்டு அவனுக்கு மகன் (வாரிசு) முறையாக அவன் குடிப்பிறந்தாள் ஒரு கோமாட்டி பெற்றுக்கொடுத்த (மகன்) வழித்தோன்றலாவான் என்று இப்பதிகத் தொடர் பொருள் பயத்தலால், இங்கு 'பொருட்டு" 'முறை'ப் பொருள்களையும் 'கொடை'ப் பொருளையும் முறையே "கு" வ்வுருபு கொடுப்பதாகும். பெற்றோர் பெயர்களை அண்மையில் குறிப்பதால் அவர்களுக்குப் பாட்டுடைத் தலைவன் நேரே ஈன்ற மகனுவதைப் பொருந்தக் கூறவேண்டுவதன் பொருட்டும், சேய்மையில் சுட்டிய சேரனுக்கு அவன் வழித்தோன்றல் ஆவதைக் குறிக்கும் பொருட்டும் இரண்டுக்கும் உதவ ஒண்ணுத 'மருகன்' என்பதை விலக்கி, ஒருங்கே இருபொருளிலும் செவ்வனே

நின்று அமைவதான 'மகன்' என்ற சொல்லேயே இங்கு இப்பதிகங்களில் புலவர் ஓர்ந்து உபயோகித்துள்ளார் என்பது தொடர் அமைப்பால் இனிது தெளியக் கிடக்கின்றது.

7. முடிவுரை

தமிழ் நாட்டில் குடமலைத் தொடருக்கு மேற்கே குடபுலத்தில் மட்டுமே இம் மருமக்கள்- தாயம் நெடு வழக்காய் நின்று வருகிறது என்று இவ்வாராய்ச்சி யால் தெளியக் கிடைக்கிறது. எனினும், அம்மலைத் தொடருக்குக் கிழக்கே தமிழகம் முழுவதும் சங்க காலம் தொட்டு மக்கள்- தாயமே நிலைத்து நிற் கின்றது. இக் கீழ் புலத்தில் என்றும் யாண்டும் யாராலும் மருமக்கள்-தாயம் ஆட்சி பெற்றதான குறிப்பே நூல்களில் கிடையாது. இங்ஙிலையில் இம் மருமக்கள்-தாயம் தொல்லைத் தமிழ் மரபா? பழ மரபாமேல் தமிழகத்தில் கேரளம் ஒழிந்த பிற பகுதி களில் எல்லாம் இது வழக்கு இழந்தது மட்டும் அன்றி பழஞ் சேரருக்கு மக்கள் - தாயமே மரபா மெனத் தமிழர் மயங்கும்படி இது மறக்கப்படவும் காரணம் என்ன? தமிழ் மரபன்றேல் சேரர் எக் காலத்தில் யாண்டிருந்து எப்படி இதனை மேற் கொள்ளலாயினர்? சேரரே தமிழர் தானு? அன்றி 'வடவாரியரை வணக்கியது' போலவே, தமிழப் படையை எல்லாம் இடையறப் படுத்தி'த் தருக் கினர் என்று இவர் கீர்த்தி கொள்வதால், இச் சேரர் தமிழர் அல்லாத அங்ஙியரா?

இவ்விடத்தில் நாம் கருத வேண்டியன இன்னும் சில உள. தமிழகத்தில் மேல்புலத்து மட்டுமே இத் தாய்வழித் தாய முறை நடக்கின்றது. அங்கே நாயர் முதலிய திராவிட சமுதாயத்தார் மட்டுமல்லர்

தம்மை நல்ல ஆரியப் பிராமணராகப் பாராட்டித் தருக்கும் நம்பூரிமாரும், புறமதத்தராய்ப் பிற நாட்டிலிருந்து வந்து குடியேறிய மாப்பிள்ளைமாருமே மருமக்கள்-தாயிகளாயிருக்கின்றனர். சமீப காலத்தில் கீழத் தமிழ் நாடுகளிலிருந்து வந்தேறிய சிலர் ஒழிய, நெடுங்காலமாகக் குடமலைக்கு மேற்கிலுள்ள சேர நாட்டார் எல்லாரும் தொன்று தொட்டு மருமக்கள்-தாயத்தையே கையாண்டு வருகின்றனர்.

இவ்வாறு மேல் புலத்தில் மட்டும் தாய் வழியும் பிறிதெங்கும் தந்தை வழியுமாய் இருப்பதன் சரித மூலச் செய்திகளைத் தேர்ந்து தெளிதல் தமிழர் கடனாகும் அன்றோ? மிகப் பழங்காலத்தில் தமிழகம் முழுவதும் தாய்வழி மரபே பரவி இருந்து, பிறகு மக்கள்-தாய ஆரியர் வந்தேறிய பின், கீழ்த் தமிழ் நாடுகளில் தாய்வழி நெகிழ்ந் தொழிந்து தந்தை வழித் தாயம் மேற் கொள்ளப்பட்டிருக்கலாம். எனினும், இத்தாய மாற்றம் குடமலைத் தொடர் கடந்து மேலைப் புலச் சேரரை இணைக்க மாட்டாமல் கேரளத்தில் மட்டும் பழைய தாய்வழி தங்கியது எனலாம்.

கேரளத்தில் மாப்பிள்ளைமார் என்பார் ஆதியில் அராபி நாட்டினர் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிவதொன்றே. சமயத்தாலும் இவர் மகம்மதியர். மகம்மதியர் சமுதாய வழக்க அனுஷ்டானங்களை எளிதில் மாற்ற இணங்காத பிடிவாதிகள் என்பதும் தங்கள் அனுஷ்டானங்களுக்காகத் தமது உயிரைப் பொருட் படுத்தாது கொடுத்தேனும் தம் ஒழுக்க வழக்கங்களைப் பேணுபவர் என்பதும் உலகறிந்த

செய்தி. இப்படி இருக்க, இவ்வரபிய மாப்பிள்ளைமார் குடநாடு புகுந்தபின், அங்கே பரசுராமர் சாபத்துக்குப் பயந்து, தம் பழையகுல ஒழுக்கம் குன்றப் பல புதிய அநாரிய ஆசார அனுஷ்டானங்களோடு மருமக்கள்- தாயத்தையும் மேற்கொண்டுள்ள ஹிந்துக்களின் தூண்டுதலால் தாங்களும் மருமக்கள் - தாயிகளாகி விட்டார்களா? அல்லது இவர்கள் பூர்விக அராபியாவில் கையாளப்பட்ட பண்டை மருமக்கள்-தாயத்தைப் புதிய மகம்மதியர் அந்நாட்டில் மாற்றினபோது அதனைத் தாம் கைவிடச் சம்மதியாமல் அரபியாவை விட்டுக் குடநாடு புகுந்து தம் பழந்தாய முறையை விடாது பேணி வருகின்றனரா? அராபி தேசத்தில் ஆதிகாலத்தில் மருமக்கள்- தாயமே இருந்தது என்பது நல்ல ஆராய்ச்சியாளர் ஆய்ந்து துணிந்தசெய்தி. * அராபி நாட்டுக்கும் குடபுலத்துக்கும் தொள்று தொட்டு நெருங்கிய தொடர்புண்மையும் சரிதம் அறிந்த செய்தியே ஆகும்.

இந்நிலையில், அராபியர் மகம்மதியராகிப் பல புதிய ஆசாரத் திருத்தங்களை ஏற்படுத்தி அமைவதற்கு வெகு காலத்துக்கு முன்னரே சில மருமக்கள்-தாய அராபியர் குடபுலத்தில் குடியேறினவர் நாளடைவில் ஹிந்துக்களாயினர். அவரோடு பின்னர் மகம்மதியர் மருமக்கள்- தாயிகளான அரபி

* W. ராபர்ட்ஸன் ஸ்மித் என்பவர் எழுதிய "பழைய அராபியாவில் உறவு முறையும் மணவியலும்" என்ற புத்தகம் பார்க்க. (Kingship & marriage in early Arabia By W. Robertson Smith)

மாப்பிள்ளைமாரும் சமயமாறினும் தங்கள் பழ வழக்கங்களைக் கைவிட மனமில்லாதவராய், அப்பழ வழக்குகளுக்கு இடமற்ற தமது நாட்டைவிட்டுச் சேர நாட்டில் வந்தேறி தம் குலத்தவர் பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே ஆண்டுப் போந்து தமது நாட்டுத் தாய்வழித் தாய முறையை விடாது பேணி வரும் குடபுலக் குடிகளோடு ஒருங்கு வாழலாயினர் என்று கொள்ளலாமா?

இத் தாய் வழித் தாயத்தார் ஆதிக்கம் வளர்ந்த இடத்தில் தெற்கே நாஞ்சில் நாட்டுத் தமிழரைப் போலப் பிறமக்கள்- தாயிகள் சிலரும் நாளடைவில் கால இடமாறுதலால் தாய்வழி முறையைத் தாமும் கையாளத் தொடங்கியிருக்கலாம். அதற்குச் சமாதானங் கூறுமுகத்தால் வடநாட்டில் தாம் தாயைக் கொன்ற உள்ளூளைக்கும் உணர்வு தூண்டப் பரசுராமர் தென்மேற்கே கேரளத்தில் தாய் வழிவகுத்துத் தாய் மார்க்குச் சிறப்புநிலை மிகுத்து உதவும் புதுமுறைகள் படைத்துத் தம் பழைய பழி துடைத்தது போலோர் அற்புதக் கதையினைக் கற்பித்தும் இருக்கலாம்.

இன்னும், வடகங்கை வளநாட்டில் மூன்றூழிகட்கு முன் இருந்த அசல் ஆரியப் பார்ப்பனப் பரசுராமரைப் பல காடும் நெடுமலையும் கடத்தி இழுத்துக் குட நாட்டில் புகுத்தியதோடு அவரை ஆரிய ஆசாரங்களை அறவொழிக்கும் குலக் கோடரியாகவும் பழி சுமத்தும் பொருந்தாப் பொய்க் கதைகளை புறக்கணித்து, அராபி நாட்டுத் தொடர்பு குறிக்கும் பல சரித சூசனைகளை ஆராய்வது பலன் தராதா?

குதிரை மீது கைலாயம் சென்றதாக நம்மவர் பாராட்டிப் புகழும் சேரமான், வெண் நுரை எழுவி அலை மலைதழுவும், தண்கடல் மார்பு தவழும் கப்பலேறி அராபிநாடு புகுந்தவராக அந்நாட்டில் வழங்கும் வரலாற்றின் உண்மையை விசாரிப்பது மெய்ச் சரிதப் பழஞ் செய்தி அறிய விரும்புவோர்க்குக் கடமையன்றோ? இனைய பல கேள்விகளும் எழுபவெல்லாம் நடுநிலையில் உண்மை காணும் நோக்கமொடு ஆராயத் தக்கனவேயாம்.

ஆனால் இவையெல்லாம் எடுத்துக் கொண்ட இந்த ஆராய்ச்சிக்கு அவசியம் அல்லாதன ஆகையால் அவற்றைப் பிந்தித் தக்க சமயம் கிடைத்துழிச் சாவகாசமாக விசாரிக்க விடையேற்பேம்.

தற்போது தமிழகத்தே மேல் புலத்தில் வழங்கி வரும் மருமக்கள் தாயமுறை புதிதொன்றில்லை என்பதும் தொல்லைச் சங்ககாலப் பழஞ்சேரர் குடிகளிலும் அடிப்பட்ட தொல் மரபாய் ஆட்சி பெற்றுத் தொன்று தொட்டே வழங்கி வருவதாய்த் தெரிகிறது என்பதுமே இவ்வாராய்ச்சியால் நாம் காணக் கிடைக்கும் பொருளாகும்.